# அலைமாடம்

கலை இலக்கிய சஞ்சிகை – 2013

அலை – 01




தமிழ்மன்றம்

யா/புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை

# அலைமாடம்

## கலை இலக்கிய சஞ்சிகை

## 2013

### அலை 01

ST. ANTONY'S KAYTS COLLEGE

**தமிழ்மன்றம்**

**யா/புனித அந்தோனியார் கல்லூரி**

**ஊர்காவற்றுறை**

இதழின் பெயர் : அலைமாடம்

இதழாசிரியர் : செல்வி வ. மதுசா

பொறுப்பாசிரியர் : திரு. ந. சசிகுமார்

அட்டைப்படவடிவமைப்பு : கோல்டன் பதிப்பகம்,திருநெல்வேலி

பக்கங்களின் எண்ணிக்கை : 60

வெளியீடு : தமிழ்மன்றம்

யா/ புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

பாரதியார்

## கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படும் "அலைமாடம்" எனும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரி மாணவர்கள் பல்வேறுபட்ட போட்டிகளில் தமது தனித்துவமான திறமையினை வெளிக்காட்டத் தவறுவதில்லை. ஆற்றல்கள் போட்டிகளோடு மட்டும் நின்றுவிடாது அவ்வாற்றல்களும் திறமைகளும் ஏனையவர்களையும் சென்றடைய வேண்டும். இச் சஞ்சிகையிலும் மாணவர்களின் தேடல்களையும் ஆக்கத் திறனையும் கண்டுகொள்ளலாம். இச்சஞ்சிகையில் வெளிப்படப்பட்டுள்ள விடயங்கள் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தருவதுடன் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பாக அமையும். ஆண்டுதோறும் "அலைமாடம்" வெளிவந்திட வாழ்த்துகிறேன்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்
அதிபர்

## பொறுப்பாசிரியரிடமிருந்து.......................

எமது பாடசாலையில் தமிழ் மன்றத்தினரால் அலைமாடம் எனும் சஞ்சிகை வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பூமிக்கடியிலுள்ள தங்கத்தை தோண்டியெடுத்து விதவிதமான அழகான ஆபரணங்களை உருவாக்குவது போல மாணவர்களிடம் மறைந்துள்ள ஆற்றல்களை நேர்த்தியாக வெளிக்கொணர்வதற்கு இச்சஞ்சிகை உதவியுள்ளது. மாற்றமுறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மாற்றம் என்பது காலத்தின் நியதி இன்று கற்றல் கற்பித்தல் செயற்பாடானது நவீன மயப்படுத்தப்பட்டு பல்துறையிலும் பரிணாம வளர்ச்சி கண்டு வருகிறது. இந் நிலையில் மாணவர்களின் ஆக்கத்திறனை அதன் வெளிப்பாடுகளை பாடசாலையிலே வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் இது போன்ற சஞ்சிகைகள் மாணவர்களின் ஆக்கத்திறனை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை

திரு.ந.சசிகுமார்

## தலைவரின் உள்ளத்திலிருந்து ...

ஊர்காவற்றுறையின் கலங்கரை விளக்காக ஒளிரும் புனித அந்தோனியார கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றத்தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன். இச்சஞ்சிகை முதன் முதலாக 2013 ஆம் ஆண்டு சிறப்பாக வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இச் சஞ்சிகை எமது கல்லூரி மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்களைக் கொண்டு பல்துறை சார்ந்து வெளிவருகின்றது.

மற்றும் இச் சஞ்சிகை வெளியிடப்படுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர்,ஆசிரியர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

செல்வன் ச.நிவேன்
தமிழ்மன்றத் தலைவர்

## இதழாசிரியரிடமிருந்து......

எமது பாடசாலையில் **அலைமாடம்** என்கின்ற இச்சஞ்சிகை வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மாணவர்களுடைய தேடல்களின் வெளிப்பாட்டினையும் அவர்களுடைய ஆக்கத்திறனையும் அறிவியல் பார்வையினையும் இவ்விதழினூடாகக் கண்டுகொள்ளலாம். சஞ்சிகை ஆக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மிகக் குறுகிய காலத்தில் இச்சஞ்சிகை மிக்க சிரமத்தின் மத்தியில் வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற இதழ்கள் இனிவரும் காலத்திலும் வெளிவரவேண்டும் என்பதே அனைவரதும் அவா. இவ் அவா செயல் வடிவம் பெற்றிட இறைவன் அருள்புரிவான்.

செல்வி. வ. மதுசா
இதழாசிரியர்

அலையின் உள்ளே......  பக்கம்


| | |
|---|---|
| 1) தமிழ் இக்கியவரலாற்றில் பாரதி | 01 |
| 2) நட்பு | 03 |
| 3) சுற்றாடல் பாதுகாப்பு | 04 |
| 4) விபுலானந்தஅடிகளார் | 06 |
| 5) இயற்கைஅனர்த்தங்களும் மனிதவாழ்க்கையும் | 07 |
| 6) இலக்கியகல்வியின் தேவை | 09 |
| 7) நன்றிக்குவித்தாகும்நல்லொழுக்கம் | 11 |
| 8) அறிவுத்தேடலில் இணையம் | 13 |
| 9) நீதிக்கதை | 16 |
| 10) வாருங்கள்உலகாளுவோம் | 17 |
| 11) ஊடகங்களும் தமிழ்மொழிவளர்ச்சியும் | 18 |
| 12) தமிழ்மொழி | 20 |
| 13) நட்பு | 21 |
| 14) விடிவு | 22 |
| 15) நெஞ்சம் கனக்குதே | 23 |
| 16) தொலைந்துபோனஅமைதி | 25 |
| 17) கிடைக்காதசுகந்திரம் | 28 |
| 18) பன்மைகலாசாரஊடாகசமாதானம் | 29 |
| 19) படிபடி | 30 |
| 20) தமிழ் மாதங்கள் கூறும் பழமொழிகள் | 31 |
| 21) கல்வி | 32 |
| 22) யார் பொறுப்பு? | 33 |
| 23) அம்மாகவிதை | 34 |
| 24) கல்விஅன்றும் இன்றும் | 37 |
| 25) மழைதந்தவாழ்வு | 39 |
| 26) பட்டமளித்தவள் | 40 |
| 27) கைபேசி | 41 |
| 28) தொடர் மொழிக்குஒருமொழி | 42 |
| 29) மரபுத் தொடர் | 43 |
| 30) பொதுஅறிவு | 46 |
| 31) சிரிப்பிலேசிந்திக்க | 48 |
| 32) விடுகதைகள் | 49 |
| 33) வடமொழியும் தமிழும் | 50 |
| 34) மரபுப் பெயர்கள் | 51 |
| 35) மொழிவளம் | 52 |
| 36) நூல்களும் ஆசிரியர்களும் | 53 |
| 37) இந்து நாகரீகத்தில் இசைக்கலையின் முக்கியத்துவம் | 59 |

# தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் (1882-1921) காலத்திற்கு முன்பு சோம்பேறிகளாகவும் சிற்றிம்பபிரியர்களாகவும் ஆங்கில அரசின் தலையாட்டிகளாகவும் விளங்கி வந்த அரசர்கள், உலகப் பிரபுகள் மீது சிறுபிரபந்தங்களைப்பாடி அவர்களை திருப்தி செய்வதே பெரும்பாலும் அக்காலப் புலவர்களின் வழக்கமாய் இருந்து வந்தது. கோபாலகிருஸ்ணபாரதி, அருணாசலகவிராயர் போன்றோர் எளிமையான முறையிலே "நந்தன் சரித்ததிரக் கீர்த்தனை""இராமாயணக் கீர்த்தனை" பாடி மக்களை கவர்ந்த போதிலும் அவை சமுதாய முன்னேற்றத்திற்கோ மக்களின் பிரச்சினைக்காக புதிய சிந்தனைக்கோ இடமளிக்காமல் சமய பாடலாக இருந்து வந்தன. 19வது நூற்றாண்டு இறுதியிலே நாவல் என்ற இலக்கிய வடிவம் தமிழில் புகுந்தது. கட்டுரைகள் மக்களுக்கு பயன்படக் கூடிய வகையில் எழுதப்பட்டன. ஆயினும் மக்களை எழுற்சி பெறச் செய்யும் சக்தி இவற்றுக்கு இருக்கவில்லை.

இந்த நிலையில் தான் பாரதியின் தோற்றம் இடம்பெறுகின்றது. "பொருள் புதிது""சுவை புதிது" ஆக மக்களுக்கென தன் கவித்துவத்தை பயன் செய்ய வந்த கவிஞன் என்ற வகையிலே தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி முக்கியத்துவம் பெறுகிறார். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் நெஞ்சில் உரமும் இன்றி நேர்மை திறமும் இன்றி வஞ்சினயிலும் வாய்ச் சொல்லிலும் வீரராய் வாழ்ந்து வந்த மக்களின் சிந்தனைகளைத் தூண்டி சுகந்திர ஆவேசத்தை ஊட்டி இலக்கியத்திற்கு அதன் பயன்பாட்டிற்கு புதிய பரிணாமம் அமைத்த வகையில் பாரதிக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஓர் முக்கியமான இடமுண்டு.

தேசிய கவிஞன் என்ற எல்லைக் கோட்டுக்குள் மட்டும் பாரதி அடங்கி நின்றிருப்பான் ஆயின் இந்தியா சுகந்திரம் அடைந்திருந்தும் அவன் மறக்கப்பட்டிருப்பான். ஆனால் பாரதி மறைந்தும் பல ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவன் நினைவு கூறப்படுவதும் அவன் ஆக்கங்கள் கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்து படிக்கத் தூண்டுவதும் அவன் பழைமையில் இருந்து புதுமைக்கு தமிழ் கவிதையையும் உரைநடையையும் கொண்டு சென்றமையால் ஆகும்.

பாரதியின் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு என்பன 20ம் நூற்றாண்டின் காவியம் எத்தகைய நோக்குப் போக்கு அமைப்புக் கொண்டது என்பதற்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது. பழமையான காவிய மரபைக் கைவிட்டு சுருங்கிய அளவில் காவியச் சுவை அமையும் வகையிலே சாதாரண எழுத்தறிவுள்ளவனும் படித்து நயக்குமாறு புதிய காவியம் படைத்து தந்த வகையிலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதிக்கு முக்கிய இடமுண்டு.

இறந்த காலத்தின் செழுமையை எடுத்துக் காட்டி நிகழ்காலத்தின் குறைகளை விளக்கி எதிர்கால நல்வாழ்விற்கு வழிகாட்டும் வகையிலே கவிதையும் வசனமும் செய்தவன் பாரதி. சாதிப் பாகுபாட்டிற்கும், பெண் அடிமைக்கும் , மூடப்பழக்கத்திற்கும் , சமத்துவம் அற்ற

ஏற்றத்தாழ்விற்கும் எதிராக போர்க்கொடி தூக்கிய வகையிலும் பாரதியின் இலக்கியப் பணி மகத்தானதாகும்.

பேசுவது போல எழுத வேண்டும் என்று உரைநடைக்கு விதி செய்த பாரதி அவ்விதியை விளக்கும் வகையில் தானே உரைநடையில் எழுதிக் காட்டினான். அவனது நடை வெறும் எழுமையினால் மட்டும் சிறப்புப்பெறவில்லை அழகிலும் கவித்துவ ஆற்றலிலும் அவனது உரைநடை பிற்காலத்தவருக்கு வழிகாட்டியாய் அமைந்தது.

பாரதி எழுதிய வசன கவிதை பரிணாம வளர்ச்சியே இன்றைய புதுக்கவிதை. எனவே கவிதையின் புதுவடிவ அமைப்பிற்கு அவனே அத்திவாரமிட்டான் என துணிந்து கூறலாம். கலைத்துறையின் வளர்ச்சி,தேசியத்தின் எதிர்காலம் மேற்குக் கலைகள் தமிழில் புக வேண்டிய இன்றியமையாமை எனப் பலவற்றிற்கும் தீர்க்கதரிசியாக விளங்கி அவற்றை சாத்தியமாக்கும் வழிவகையை தனித்தன்மையோடு கவியாலும் வசனத்தாலும் எடுத்துக்காட்டிய பாரதி 20ம் நூற்றாண்டில் தமிழிலக்கியத்தின் விடிவெள்ளியாக விளங்குகின்றான்.

திரு.ந.சசிகுமார்
**(M.A,PGDE)**

அன்பை வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது
அன்பின் விலை அன்புதான்

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது
அத்மீக சக்தியால் அவரை உணரலாம்

அன்பிற்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை
நன்மையை பலர் விரும்புவார்கள்-ஆனால்
உண்மையை சிலரே விரும்புவார்கள்

## நட்பு

ஓ இறைவா என்னுடைய நண்பர்களுக்காகவும் அவர்கள் கொண்டு வந்த மகிழ்ச்சிக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றேன். வேலைகளைப் பகிர்ந்து கொண்டதில் உண்டான ஆனந்தத்துக்காகவும், பிரச்சினைகளுக்காகவும, சிரிப்புக்காகவும் அத்துடன் சாகசங்களின் மகிழ்ச்சிக்காகவும், ஒருமித்துக் கற்கவும் உமக்கு நன்றி கூறுகின்றேன். அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். திறமைக்காகவோ நன்மைக்காகவோ அல்ல ஆனால் பிழைகளுக்காகவும் வேற்றுமைகளுக்காகவும் நன்றி.

நண்பன் ஒரு உண்மையான பொக்கிசம் நட்ப்புத்தான் சூரிய பிரகாசம். மக்கள் செய்யும் அருமையானவற்றில் நட்பு ஒரு சிரிப்பு. இரு நண்பா்களால் பகிரப்பட்ட நல்ல நேரம். ஒரு இனிமையான நினைவு பாடலின் பிரிதிபலிப்பு போல, ஏதாவது பிழையாகப் போகும் வேளையில் நட்பு ஒரு ஊக்கமளிக்கும் புன்னகை போன்றதாகவும். “நட்பு ஒரு விசேட குரல், ஒரு அருமையான பழகிய முகம் நட்பு வாழ்வின் இனிய கொடை அந்த இடத்தை எதனாலும் எடுக்க முடியாது.”

நம்பிக்கை உள்ள நண்பன் பலமான காவலுக்குச் சமம், அவனைக் கண்டடைந்தவன் செல்வதைக் கண்டடைந்தவன் போலாவான். நம்பிக்கை உள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றும் இல்லை. அவனது நம்பிக்கைக்கு எந்த அளவு பொன்னும், வெள்ளியும் நிகராகா. நம்பிக்கை உள்ள நண்பன் வாழ்வைத் தரும் மருந்து போல இருக்கின்றான். ஆண்டவருக்கு அஞ்சுபவர்கள் அவற்றை கண்டடைவார்கள்.

ஒரு நண்பனை வைத்திருப்பது கடவுள் கொடுத்த கொடைகளிலெல்லாம் தூய்மையானது. ஏனென்றால், இந்த அன்பு பணம் கொடுத்து வாங்க முடியாது. இது சிறுபிள்ளைத் தனமானதுமல்ல, ஆழ்ந்த அா்ப்பணிப்பைக் கொண்டுவரக் கூடிய விபரிக்க முடியாத ஒரு நட்பு.

அகிலத்தை விட சூரியன் உதிக்கும் ஆகாயத்தை விட வேறு ஏதோ அதிகமாக நமக்குத் தேவை என்று கடவுளுக்குத் தெரியும் ஆகவே அன்பு செய்ய அவர் நண்பா்களை அனுப்பி தம் ஆன்மபவை உயரவைத்தாா். நட்பு என்பது மதிப்பிட முடியாத ஒரு கொடை. அதை வாங்கவோ விற்கவோ முடியாது. ஆனால் அவன் பெறுமதி தங்கத்தால் ஆன மலையை விட பெரியதுஏனென்றால் தங்கம் குளிர்ந்தும், உயிரற்றதுமானது. ஆனால் பார்கவோ கேட்கவோ முடியாது.

இக்கட்டமான வேளையில் உற்சாகமூட்ட சக்தி இல்லை. அதற்குக் கேட்பதற்குச் செவியுமில்லை. விளங்கு வதற்கு இதயமும் இல்லை. அது உனக்கு வசதியை கொண்டு வராது. அல்லது உதவிக்கரம் நீட்டவும் முடியாது. கடவுளிடம் ஓர் கொடையைக் கேட்கும் போது அவர் வைரத்தையோ, முத்தையோ, செல்வத்தையோ அனுப்பாது உண்மையான நண்பனின் அன்பை அனுப்பினால் நன்றாயிருக்கும்.

‘நாங்கள் சந்திக்கும் சில நண்பா்கள் ஒரு சொற்ப நேரம் நிற்கின்றார்கள் இன்னும் சிலர் விசேட செயலுக்காக அல்லது புன்னைகைக்காக ஞாபகத்தில் நிற்கின்றார்கள். போல்

தெரிகின்றது. ஆனால் நம்முடைய இதயத்தில் நிற்பவர்கள் மிகமிகச் சொற்பமே அந்த வகையானஒரு நண்பனைத்தான் நான் உன்னில் கண்டேன்'.நட்பு என்பது இரு மனங்களில் ஏற்படுகின்ற அன்பின் விளைவு. எனவே நட்பு எனும் கொடை இறைவனால் அருளப்பட்ட கொடை நட்பு ஆகும்.

ஆக்கம்:-வி.மிதுசன்

9B

## சுற்றாடல் பாதுகாப்பு

மனித சமுதாயம் பெரிதும் இயற்கையிலேயே தங்கியுள்ளது. புவியின் முக்கிய கூறுகளான நிலம்,ஆகாயம்,காற்று,இயற்கைத் தாவரங்கள் என்பன பாதிப்டையும் போது சூழல் மாசடைகினறது. இதனால் இதனை ஒட்டி வாழும் மனித சமுதாயமும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது

புவியின் மூலவளங்கள் வறையறுக்கப்பட்ட நிலையில் சனத்தொகைப் பெருக்கம் மிக வேகமாக அதிகரித்து வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. அதிகரிக்கும் சனத்தொகை செறிவுக்கு ஏற்ப கைத்தொழிற்சாலைகள், பாரியஇயந்திரங்கள் என்பவற்றின் பெருக்கமும் அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இவை வெளியேற்றும் மிதமிஞ்சிய புகைக் கழிவுகள் என்பவற்றினால் சூழல்மிக எளிதில் மாசடைந்து விடுகிறது. குறிப்பாக நகரப்பகுதிகளில் இன்று சேவையில் ஈடுபட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வெளியேற்றும் புகையினால் வளிமண்டலம் பாதிக்கப்படுகிறது. அதாவது வளிமண்டலத்தி காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிக்கின்றது.

நாட்டின் நகர பகுதிகளை மையமாகக் கொண்டு தொழிற்சாலைகள், முக்கிய நிறுவனங்கள் இயங்குவதால் கிராமப்புற மக்களும் நகரை நோக்கியோ படையெடுக்கின்றனர். இதன் காரணமாக மென்மேலும் நகரின் சூழல்மாசடைகிறது. இதனால் மக்களின் ஆரோக்கியம் பாதிப்படைகிறது. இவற்றை தடுத்து நிறுத்தும்வகையில் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக தொழிற்சாலைகளையும், நிறுவனங்களையும், கொண்டு செல்வதன் முலம் மக்கள் ஒரிடத்தில் செறிவதை ஐதாக்கி சூழல் மாசடைவதை தடுக்க முடியும்.

இவ் வகையான தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் நச்சுத்தன்மை வாய்ந்தனவாகவும், உயிரின் சூழலில் பெரும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்துவனாகவும் காணப்படுவதால் அரசு இவ் விடயத்தில் உன்னிப்பாக கவனம்

செலுத்துவதுடன் சூழலைப் பாதிக்காத வகையில் தொழிற்சாலைகளை பேணிவரும் முன்னோடி நடவடிக்கைகளை பற்றியும் விழிப்பாக இருக்க வேண்டும்.

சோவியத் யூனியனில் இடம் பெற்ற "எவுக்கேனாயில்" அணு உலையின் அநர்த்தத்தின் விளைவாகவும் இந்தியாவில்போபல் நகர யூனியன் கார்பனைட் தொழிற்சாலையில் கக்கிய நச்சுவாயு வெளியேற்றத்தின் விளைவாகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள்கூன், குருடு ஆகவும் இருப்பதோடு தற்போது பிறக்கும் குழந்தைகள் கூடபாதிப்படைந்த நிலையிலேயே பிறக்கின்றன.

எனவே சரியான நடைமுறைகளை பேணாத தொழிற்சலைகளை இழுத்துமுடுவதற்கு அரசு முன்வர வோண்டும். இன்று பாவனைக்கு உதவாத பல பழைய வாகனங்கள் வீதியிலே பவனி வருகின்றன.

அவை நகர ஆரம்பிக்கும் முன்னமே கக்கும்புகை அவற்றை அடையாளம் காட்டி விடுகின்றது. இப்படியான பாவனைக்கு உதவாத வாகனங்கள் அதாவது சூழலை மாசடையச் செய்யும் வாகனங்களுகுத் தொடர்ந்தும் வாகனஅனுமதிப்பத்திரம் கொடுக்கப்பட்டு வருவதை நிறுத்த வேண்டும்.

கிராமப்புரங்களை எடுத்துக்கொண்டால் அங்கேசட்ட விரோதமாக மரங்ளைவெட்டும் நடவடிக்கை அதிகரித்துக் கொணடே வருகின்றது.அத்துடன் அடர்ந்த காடுகளுக்குள் நடுவேமர அரிவு சாலைகளே இயங்குகின்றன என்பது இரகசிய விடயமல்ல. இவர்கள் வனபரிபாலன அதிகாரிகளின் கண்களில் மண்ணைத்துவிவிட்டு காட்டுமரங்களை வெட்டிக் கடத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே நாட்டின் அபிவிருத்தியும் ஆரோக்கியமான மனித சமுதாயத்தின் மோம்பாடும் இயற்கை வளத்துடன் பின்னிப் பிணைந்தன என்றரீதியில் சூழலையும் அதன் கூறுகளையும் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமை ஆகும்.

இவ்வாறு சூழலைப் பாதுகாக்க அரசுக்குபபக்க பலமாக சமுகநோக்கு கொண்ட அரசுசார்பற்ற சமுகநலன் போதும் நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் நின்று உதவ முன்வர வேண்டும். வெள்ளம் வருமுன்பே அணைகட்டுவது முக்கிய செயலாகும்

ஆக்கம் : இ.அரிதரன்

தரம் : 9B

"நல்ல காரியம் செய்ய எப்போதும் அஞ்சாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்"

நெப்போலியன் ஹில்

## விபுலானந்த அடிகளார்

விபுலானந்த அடிகளார் கிழக்கு மாகாணத்தில்மட்டக்களப்பில் காரைதீவு எனும் ஊரில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி. இவரது தாயார் பெயர் கண்ணம்மையார். விபுலானந்த அடிகளாரின் இயற்பெயர் மயில்வாகனன். இவர் தமிழ்,ஆரியம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் புலமையும் இலத்தீன், மலையாளம் சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார். அத்துடன் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும் விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும், தமிழ்ப் பண்டிதராகவும் விளங்கினார்.

இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், திருகோணமலை கலாசாலையிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கடமையாற்றினார். தென் இந்தியாவிலுள்ள அண்ணாமலைப்பல்கலைக்கத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணி புரிந்துள்ளார். அவர் எழுதிய நூல்களில் யாழ்நூல், நாச்சியார்நான்மணிக்கோவை என்பன சிறந்தவையாகும்.

அடிகளார் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். மதுரைத் தமிழ்ச் இதழான தமிழ்ப்பொழில், இராம கிருஸ்ண சங்க இதழான ராம கிருஸ்ண விஜயம் ஆகியவற்றிலும் கலைமகள், செந்தமிழ்ச்செல்வி முதலிய சஞ்சிகைகளிலும் அடிகளார் எழதிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்தர் சம்பாசனைகள், என்பன அடிகளார் மொழி பெயர்த்த நூல்களாகும். 1922ம் ஆண்டு துறவு பூண்டு 1924ஆம் ஆண்டு சித்திரை மாதப் பௌர்ணமியில் குருதீட்சை பெற்ற துறவியாளர். அதன் பின் சுவாமி விபுலானந்தர் என்று அழைக்கப்பட்டார். 1947ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

தரம் 6A

ச. ஜான்சன்

அலையோடும் வலையோடும் மலையாமல் விளையாடி
சளையாத வீரமானமே! – நாளை
விடிவோடு புதுவாழ்வு திடமாக வருமென்று
தளராமற் கூறு மனமே !

வளர்கின்ற நிலலோடு வருகின்ற புத்தாண்டு
வளமெல்லாம் கொண்டு வருமே ! – எங்கள்
இளமாந்தர் ஏதிர்காலமே நலமோங்க ஒன்றாக
எழுவார்கள் தேறு மனமே.

சில்லையூர் செல்வராசன்

## இயற்கை அனர்த்தங்களும் மனித வாழ்க்கையும்.

அரிது அரிது என்ற மானிடப்பிறவியை பெற்ற மனிதன் நாளாந்தம் தமது வாழ்க்கையில் பல இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது.அந்த வகையில் இயற்கைஅனர்த்தங்களும் மனித வாழ்க்கையில் ஒரு பிரச்சினையாக உள்ளது.அண்மைக்காலங்களில் பல இயற்கைஅனர்த்தங்கள் ஏற்ப்பட்டுள்ளன.அந்த வகையில் சூறாவளி, எரிமலைவெடிப்பு,மண்சரிவு,சுனாமி போன்ற சில இயற்கை அனர்த்தங்கள் உதாரணமாகும்.

மனிதன் ஆதிகாலம் தொட்டே இன்று வரை பல இயற்கை அனர்த்தங்களை சந்தித்துள்ளான்.அந்தவகையில் அவன் எதிர்கொண்ட அனர்த்தங்களை நோக்குவோமாயின் பண்டைய காலங்களில் சூறாவளி, எரிமலைவெடிப்பு,மண்சரிவு, போன்ற இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட போது அதனை எதிர் கொள்ளும் வழியை அறியாத மனிதன் பல சொத்துக்களையும் உடமைகளையும் இழந்தான்.

அன்று மட்டும் அல்ல இன்றும் கூட மக்கள் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றனர்.ஆனால் இன்று பல தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக மனிதன் இயற்கை அனர்த்தங்களில் இருந்து தப்பித்து கொள்கின்றான்.தற்பொழுது இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்படுமாயின் அதனை முன்கூட்டியே கணிணி,இணையம்,தொலைக்காட்சி,வானொலி போன்ற ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கின்றனர்.அதனால் மக்கள் தங்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு தப்பி செல்கின்றனர்.இதனால் அவர்கள் இயற்கை அனர்த்தங்களில் இருந்து தப்பி செல்கின்றனர்.

இருப்பினும் எமது நாட்டில் திடீர் திடீரென பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்ப்படுகின்றன.உதாரணமாக மண்சரிவு,வெள்ளம்,நிலவெடிப்பு போன்ற சில அனர்த்தம் ஏற்ப்படுகின்றன.அதனால் மக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர்.மக்கள் வாகனங்களில் செல்லும் போது மண்சரிவு ஏற்ப்பட்டு அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது.அதே போல் வெள்ளம் ஏற்ப்படும் போது மக்கள் தங்கள் இருப்பிடங்களை இழந்து உடமைகளையும் இழந்து தவித்து கொண்டிருப்பர்.

அதே போல் வெளிநாடுகளில்கூட அதிகமான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.அதன் மூலம் கூடுதலான உயிர்ச்சேதம் ஏற்படுகின்றது.அங்கே கூடுதலாக நிலநடுக்கமே ஏற்படுகின்றது.பெரிய பெரிய கட்டிடங்கள் அங்கே காணப்படுவதால் நிலநடுக்கம் ஏற்படும் போது இலட்ச்சக்கணக்கான உயிர் பலியிடப்படுகின்றன.அது மட்டுமல்ல அந்த அனர்த்தங்களின் மூலம் தமது உடல் உறுப்புக்களை இழந்தவர்கள் எத்தனை பேர்?தாய்,தந்தையரை இழந்தவர்கள் எத்தனை பேர்?இவ்வாறு உறவுகளை சொல்லிக்கொண்டே போகலாம்.இத்தனை உறவுகளையும் இழந்தவர்கள் எத்தனை பேர்?

அது மட்டுமா இவற்றை விட மிகக் கொடிய இயற்கை அனர்த்தம் ஒன்று அண்மையில் ஏற்ப்பட்டது.அதனால் உலகமே கண்ணீரில் மூழ்கியது.அது தான் மிக கொடூரமான இராட்சத சுனாமி ஆகும்.ஆ…. எத்தனை பெரிய இழப்பு உலகிற்கு,கண்மூடி கண் திறப்பதற்கும் உலகையே ஆட்டி படைத்து விட்டது.இந்த சுனாமி 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதியன்று காலை எட்டு மணியளவில் இந்த சுனாமி ஏற்ப்பட்டது.யாருமே எதிர்பார்க்காத

வகையில் அது இருந்தது.கண் இமைப்பொழுதில் அனைத்தையுமே கொண்டு போய் விட்டது.இந்த சுனாமியால் எத்தனை கோடி மக்கள் இறந்தனர்.அது மட்டுமா?திரும்பிய பக்கமெல்லாம் அழுகுரலும் இரத்தஆறும் பிணக்குவியல்களாகவும் காணப்பட்டன.வீடுகள் கட்டடங்கள் இருந்த இடமே தெரியாமல் போனது மக்கள் தங்கள் உறவுகளை தேடி அலைந்தனர்.உடமைகளை தேடி அலைந்தனர்.

அத்தகைய கொடிய சுனாமியால் இருந்து தப்பிக்கொண்ட மக்கள் கண்ட காட்சி அதைவிட கொடியது.சுனாமியால் அள்ளுண்டு செல்லும் மக்கள்"எங்களை காப்பாற்றுங்கள்" என்று அலறியபடி செல்வதை கண்டனர்.எங்களை காப்பாற்ற முடியாத நிலை அழுது புலம்பினர் என்ன பயன் இறுதியில் எதுவுமே மிஞ்சவில்லை இப்படி இந்த அனர்த்தம் அமைந்தது.

இவ்வாறு மக்கள் தமது வாழ்க்கையை இயற்கை அனர்த்தங்களோடு சேர்ந்து கட்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.ஆனால் இவர்களின் இந்த பிரச்சினைகளுக்கு முடிவே கிடையாது.இறைவன் மீது பாரத்தை போட்டு வாழ்க்கையை நடத்துகின்றனர்.

பா.சசீனா
கலை 13

### இதைக்கடைப்பிடி

| | |
|---|---|
| வணங்கத் தக்கவர்கள் | தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதது | புகழ், பசி |
| போனால் வராதது | மானம், உயிர் |
| தானாக வருவது | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | ஆசை துக்கம் |
| தவிர்க்க முடியாதது | பசி, தாகம் |
| பிரிக்கமுடியாதது | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமனானது | இறப்பு, பிறப்பு |
| கடைத்தேற வழி | உண்மையும், உழைப்பும் |

## இலக்கிய கல்வியின் தேவை

“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று தமிழை உயிருக்கு நிகராய் வாழ வைத்தார் பாரதியார். இயல், இசை, நாடகம் என முத்தமிழிசை உடையது இனிய தமிழ். இத்தமிழில் பல இலக்கியங்கள் முன்னோர்களால் படைக்கப்பட்டது. இதைக் கற்று பல புலவர்களும், அறிஞர்களும், பண்டிதர்களும் எவ்வளவு பேர்? அதை எண்ண கூட முடியாது.

அவ்வாறு நிலைப்பெற்று விளங்கும் இன்பத்தமிழில் இலக்கியங்களை நாம் எடுத்து கொண்டால் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றது எனலாம். சோழர் காலத்தில் எழுந்த ஐம்பெரும் காப்பியங்கள் தமிழில் இலக்கியங்களுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

இதைத் தவிர பல இலக்கியங்கள், மகாபாரதம் இன்றும் பல புகழ்களை அள்ளி வீசுகின்றது. இவ்விலக்கிய நூல்கள் அன்றைய காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் ஆட்சிமுறை மக்களின் பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், பண்பாடுகளை எடுத்து நோக்கும் இலக்கியமாக இவை விளங்குகின்றன. இவை தழிழை மட்டுமல்லாது சமய நெறிகளையும் எடுத்து விளங்குகின்றன.

ஓவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு கருப்பொருளை கொண்டு விளங்குகின்றது. இவ்வாறான இலக்கியங்களை கல்வியில் செலுத்துகின்ற போது மிகவும் உச்ச நன்மையை பெறுகின்றது. இவ்வாறான இலக்கியங்களினூடாக மாணவர்கள் கற்று கொள்ள வேண்டிய பல விடயங்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக கம்பரின் கம்பராமாயாணத்தில் இராமன் என்னும் அவதாரம் விபரிக்கின்றது. அவரது நற்குணங்கள் வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது தந்தையின் மேல் மிகவும் அன்புடையவனாகவும் சகோதரத்துடன் அன்புடையவனாகவும் தாயின் சொற்படி கேட்டு நடப்பவனாகவும் இராமன் எனும் பாத்திரத்தினுடாக எடுத்து காட்டப்படுகிறது.

இவ்வாறு மாணவர்களும் நல்ல பண்புகளை கொண்டு காணப்பட வேண்டும் என்ற உள்ளாந்தத்தை எடுத்து நோக்கலாம். அது மட்டுமல்லாது கச்சியப்பசிவாச்சாரியாரின் கந்த புராணத்தை எடுத்து கொண்டால் சூரனை வதம் செய்த முருகனின் அருள் சூரனுக்கு கிடைப்பவை இவ்விலக்கியத்தில் காணலாம். இவ்விலக்கியத்தில் தீய செயல்களை செய்யக்கூடாது எனவும் தீய செயல்களை செய்யும் போது அவர்கள் அழிக்கப்படுவார் என்ற உண்மையும் வெளிக்காட்டப்படுகின்றது. இவ்வாறு இலக்கியங்களினூடாக நற்செயல்களை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

இவை தவிர பாரதியாரின் இலக்கிய பாடல்கள், பாரதிதாஸன் இலக்கியப் பாடல்களில் நல்லொழுக்கங்கள் பற்றி விளக்கப்படுகிறது. உதாரணமாக பாரதியாரின் பாடலில்

“ஓடி விளையாடு பாப்பா-நீ

ஓய்ந்திருக்கலாகாது பாப்பா”

ஏன்ற பாடலடியில் ஒரு குழந்தையை உற்சாகப்படுத்துவது நயக்கத்தக்கதாகும். பாரதியாரின் பாடலில் பெண்ணின் அடிமைத்தன்மையும் பயத்தையும் இல்லாது ஒழிக்க முற்படுகிறார். இவை இன்றைய காலத்துக்கு பொருத்தமுடையதாய் காணப்படுகிறது.

இவை தவிர ஐம்பெரும் காவியங்களை எடுத்து கொண்டால் ஒவ்வொரு காவியங்களிலும் பிரதான பாத்திர படைப்பை கொண்டு நல்லொழுக்கங்கள் விளக்கப்படுகின்றது. இவை மிகவும் சிறந்த இலக்கியங்களாகவும் நயம் மிக்கவையாகவும் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்கள் இன்றும் மாணவர்கள் முக்கியத்துவம் கொடுத்து படிப்பது மிகச் சிறந்ததாகும்.

இவ்வாறான இலக்கிய நூல்களை மாணவர்களின் பாடத்திட்டத்தில் அமைக்கப்பெறுவது சிறந்ததொன்றாகும். இவ்வாறு இலக்கியங்கள் பாடப்புத்தகத்தில் இடம்பெறும் போது மாணவர்கள் மிகவும் இலக்கியத்தை நயத்து கற்க கூடியவர்களாகவும் மிகைதிறன் கொண்டவர்களாகவும் திகழ்வார்கள்.

இவ்வாறான இலக்கியங்கள் மாணவர்களின் கல்வியில் இடம் பெற்று விளங்கும் போது தமிழினது இன்பச்சுவையும்,பொருட்சுவையும், கவிச்சுவையும் கொண்டதாக மாறி விடுகின்றது.இவை தமிழ் மொழியை வளர்க்கும் உந்து சக்தியாக அமைகின்றது. இவை மாணவர்களின் கல்வி வளர்சிக்கு அடிப்படைத்தேவையாக அமைகின்றது.

இவை தவிர இவ்விலக்கியங்களை கற்கக்கூடிய வசதிகள் பாடசாலை நூலகத்திலோ அல்லது பொது நூலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. இவற்றை கற்று பயனை பெற வேண்டியது மாணவர்களின் கடமையாகும்.

தே.தாரணி

கலை 13

"ஒரு மனிதன் கற்காமல் இருப்பதை விடப் பிறக்காமல் இருப்பதே மேல்.ஏனெனில் பெரும் துன்பங்கள் துயரங்களுக்கு அறியாமையே காரணமாகும்"

பிளேட்டோ

# நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்

மனிதரை வையத்துள் வாழ்வாங்க வாழ வழிசமைப்பது நல்லொழுக்கம் ஒன்றே ஆகும். நாம் நல்லொழுக்கம் என்று ஒழுக்கங்களும் ஒருங்கே அதனுள் அமையும் இந்த நல்லொழுக்கத்திலே கடைப்பிடிக்க வேண்டிய நல்ல சிறந்த ஒழுக்கங்களும் தீய ஒழுக்கங்களை தவிர்த்து நடப்பதும் நல்லொழுக்கமாகும்

முதலாவதாக நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கம் "வாய்மை பேசுதல்" ஆகும். தற்காலத்தில் வாய்மை பேசுபவர்கள் குறைந்து கொண்டே வருகின்றார்கள். எதற்கெடுத்தாலும் பொய்யும் பித்தலாட்டமும் சமூகத்தில் தலைவிரித்து ஆடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் முன்னைய காலங்களில் வாய்மை பேசி வாழ்க்கையில் உயர்ந்தோர் பலருள்ளனர். அவர்களை இலக்கியங்களில் அவதானிக்க முடியும். வாய்மை பேசி வாழ்க்கையின் நாயகனாக விளங்கியவன் அரிச்சந்திர மகாராஜா. இவர் தன் வாழ்க்கையில் உண்மை பேசி சத்தியத்தை நிலை நாட்டுவதையே தனது இலட்சியமாக கொண்டிருந்தார். இவர் வாய்மைக்காக தன் நாடு,நகர்,தாலி கட்டிய மனைவி, பெற்றெடுத்த குழந்தை என்று அனைத்தையும் இழந்து இறுதியில் அரசனாக வாழ்ந்த அரிச்சந்திரன் சுடலை காத்து பிணங்களை எரிக்கும் வெட்டியான் தொழிலைக்கூட செய்தார். ஆனால் இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இலக்கியங்களிலே சரித்திரம் படைத்தார்.

அதே போல இராமாயாணம் என்ற காப்பியத்தை நாம் நோக்கும் போது அங்கு கம்பர் பெருமானால் வாய்மையின் அரசன் என்று பல இடங்களில் பாராட்டினைப் பெற்றவர் தசரத மகாசக்கரவர்த்தி ஆவார் .இவர் வாய்மையை காப்பதற்காக தன் உயிரை மாய்த்தார்.என்பதை இராமாயணத்தில் உள்ள கைகேயி சூழ்வினைப்படலததில் நோக்கலாம்.

இவர்களை இலக்கியங்களிலே நாம் நோக்கியிருந்தாலும் இவ்விரு மன்னர்களையும் தான் வாழ்வின் குருவாக கொண்டு தன் வாழ்க்கையையே போராட்டமாக ஏற்று வாழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். இவர் தன் வாழ்வில் சத்தியத்தையே பேசி தன் மக்களுக்காகவும் தன் இந்திய தாய் நாட்டிற்காகவும் வெள்ளையர்களுடன் போராடி இந்தியாவிற்கே சுதந்திரம் வாங்கி கொடுத்தார். இத்தகையோரின் வாழ்க்கை படிப்பினைகளை நாம் பெற்று கொண்டு வாய்மை பேசி வாழ்ந்தால் நாம் சிறப்பினை அடையலாம்.

அடுத்து நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கம் "நீதி தவறாமை" என்பதால் முற்கால அரசர்கள் தம் நாட்டிற்கும் தன் மக்களுக்கும் நீதி தவறாது வாழ்ந்தனர். அவர்களுள் வீர பாண்டிய கட்டபொம்மன், மனுநீதிச் சோழன் போன்றவர்கள் சிறப்பிற்குரியவர்கள் ஆவர். பாண்டிய கட்டபொம்மன் வெள்ளையர்களுக்க கப்பம் கட்டாமல் அவர்களை தன் பேச்சாலும், வீரத்தாலும் விரட்டியடித்தான். ஆனால் மனுநீதிச் சோழன் தன் பாலகன் தேரிலே சிக்குண்டு இறந்த பசுக்கன்றின் தாய் அடைந்த துன்பத்தை தானும் அடைவதே நீதி என்பதால் தன் தேரினை தன் மகன் மேல் ஏற்றிக் கொன்றார். இவரது நீதி இறைவனாலே பாரட்டப்பட்டது.

அடுத்து நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கம் "கொடை" ஆகும். முதற்கால மன்னர்கள் கொடையிலே சிறந்தவர்கள் என்பதை மறக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.இவர்களுள் மயிலுக்கு தோகை ஈந்த பேகனும், முல்லைக்கு தேர் கொடுத்த பாரியும் என பல அரசர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களுள் சிறப்பிடம் பெற்றவர் கர்ணன். இவன் கொடை செய்து இவனது கை செம்மையாக இருக்கின்றது என்று மகாபாரத்திலே கூறப்பட்டுள்ளது. அவன் இறக்கும் தருவாயில் கூட இவன் தான் பெற்ற புண்ணியத்தை வயோதிபராக வந்த கிருஷ்ணனிடம் கொடுத்து மாய்கின்றான் .இதனால் தான் இவர்கள் இலக்கியங்களிலே பெயர் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அடுத்து நல்லொழுக்கத்தை நோக்கினால் கற்பில் சிறந்தவளாக அனைவர் கண்ணிலும் திகழ்பவள் கண்ணகி. இவள் தான் கரம் பிடித்த கணவன் கோவலன் பரத்தைய குல பெண்ணான மாதவி மேல் மோகம் கொண்டு அவளுடன் வாழ்கின்றான் என்று அறிந்துகூட அவள் அவனிற்காகவே காத்திருக்கிறாள். இறுதியில் அவள் கணவன் திருடன் என்று பழிப்பெயர் சூடி இறந்ததாக அறிந்தவுடன் பாண்டிய மன்னிடம் நீதி கேட்க சென்று அவளுடைய இடது பக்க மார்பை பிய்த்தெறிந்து மதுரையே எரிக்கின்றாள். அவளுடைய

கற்பொழுக்கம் சிறந்த போதும் சிலப்பதிகாரத்திலே கற்பினளாக விளங்குபவள் மாதவி. இவள் பரத்தைய குலத்தில் பிறந்த போதும் தன் காதல் கணவன் மேல் மோகம் கொண்டு வாழ்ந்த காலங்களையும் அதன் போது அவனால் கொடுக்கப்பட்ட மணிமேகலை என்ற புதிய உறவையும் அவன் பிரிந்த போதும் பேணிப் பாதுகாத்து தூயவளாக வாழ்ந்தாள். இவளுடைய கற்பினை புலவர் குறிப்பிட பிறந்தது கவலைக்குரிய விடயம் தான் என்றாலும் தற்கால பெண்களும் கற்பிலே சிறந்தவர்களாக விளங்க வேண்டும்.

அடுத்து குருபக்தி எனும் ஒழுக்கத்தை நாம் நோக்குகையில் மகாபாரதத்திலே ஏகலைவன் என்ற வேட்டுவ குலத்தவன் அரசர்களிற்கு குருவாக கொண்டு வில்வித்தையை பயின்று தேர்ச்சி பெற்ற போதும் தன் மானசீக குருவின் சூழ்சசியினால் தன் வலது கை பெருவிரலை தானமாக கொடுக்குமளவில் அவன் தன் குரு மேல் பக்தி கொண்டவனாக விளங்குகின்றான். ஆனால் தற்காலத்தில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்க தவறுகின்றனர் என்பதை யாவரும் அறிந்த உண்மையே.

அடுத்த நல்லொழுக்கத்தை நோக்கும் போது அவ்வொழுக்கமாக "தூய்மையான நட்பு" விளங்குகின்றது. முற்காலங்களில் நட்பிற்கு இலக்கணமாக விளங்கியவர்களுள் இராவணன் நண்பன் கண்ணனும், இராமன் தோழன் குகனும் விளங்குகின்றார்கள். ஆனால் தற்காலத்தில் அழகுக்காக, அறிவுக்காக, பணத்திற்காகவே அனைவரும் நட்பு கொள்கின்றார்கள். ஆனால் நாம் கூடா நட்பை ஒதுக்கி நல்ல நட்பை பேணுதல் வேண்டும்.

அடுத்ததாக நாம் நல்லொழுக்கம் பற்றி நோக்கும் போது "பொறுமை" பேணுதல் அவசியமாகும். கடைப்பிடித்தல் வேண்டும். பெண்களும் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்."பொறுத்தார் பூமி ஆழ்வார்" என்ற கருத்தினை தன் வாழ்வில் நிரூபித்தவர் தருமன். அதே போல பூமாதேவி பொறுமைக்கு பாத்திரமாக விளங்குகின்றாள். நாமும் பொறுமை கடைப்பிடித்தால் வாழ்க்கையில் பல சாதனைகளை சாதிக்க முடியும்.

மேலும் மண்ணாசை கொண்டு அழிந்தவர்களாக கௌரவர்களும் பெண்ணாசை கொண்டு அழிந்தவனாக இராவணனும் சரித்திரத்திலே இடம் பிடித்த மக்களிற்கு மண்ணாசையும் பெண்ணாசையும் கொண்டால் அழிவே ஏற்ப்படும் என்று விளங்க் வைக்கின்றார்கள்.

மேலும் உண்பதும் மது அருந்துவதும், விலைமாதுவினை தேடிச்செல்வதும், புகைப்பிடிப்பதும், போதைப்பொருட்களை பாவிப்பதும் தவிர்க்க வேண்டியதாக விளங்குகின்றது. நாமும் நல்லொழுக்கத்தினை வாழ்க்கையில் கடைப்பிடிப்பது மேன்மையானது. "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" எமக்கு இம்மையிலும் மறுமையிலும் வாழ்வின் பயனைத் தரும் என்பதில் ஒரு துளி கூட ஐயமில்லை. ஆகவே நாம் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ்க்கை எனும் கல்வெட்டில் பெயர் பதிப்போம்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

க.கங்கா

கலை 13

## அறிவுத் தேடலில் இணையம்.

காலங்கள் கடந்து இன்னொரு பொற்காலத்திலே வேகமாக வீறுநடை பயிலுகவனாக இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்பு தட்டி எழச்சியுடன் இயங்கி கொண்டிருக்கும் கணினியுகம் இது.என்று கூறினால் மிகையல்ல. விலங்குகளுடன் விலங்குகளாக தம்மையே யார் என்று தெரியாது தம்மை மறந்து நடை பயின்றது அந்த காரமாக இருந்தது.எனினும்,இன்று மனிதன் நன்கு முன்னேற்றம் அடைந்து விட்டான். மாற்றங்கள் நிலையான மாறுகின்ற உலகினிலே மானிடனின் மாற்றத்தை ஏற்றுக் கொண்டு காலநீரோட்டத்தில் கங்குகரை தெரியாமல் துரித முன்னேற்றம் அடைந்து கொண்டுள்ளான். ஆம் அவற்றினைத் தன் வாழ்க்கையிலே அனுபவித்த கவிஞன் ஒருவன் அதனை பின்வருமாறு கூறுகின்றான்."ஆதி மனிதின் கல்லைக் கண்டான். அடுத்த மனிதன் காட்டை அழித்து நாட்டைக் காட்டினான் நேற்றைய மனிதன் வானிலே தனது தேரினை ஓட்டினான். இன்றைய மனிதன் நிலவினிலே தனக்கென தனியிடம் தேடுகின்றான் வரும் நாளைய மனிதன் ஈரேழு உலகங்களையும் அரசாளப் போகின்றான்." ஏன்று மிக அழகாக சமூகத்திலே விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் ஏற்ப்படுத்திய விந்நை மிகு மாற்றங்களினை மிக சிறப்பாக கூறிவிடுவதனை கண்கொண்டு நோக்க முடியும்.

மனிதகுல வரலாற்றிலே அவன் இயற்கையிடமிருந்து கற்றுக் கொண்டு விடயங்கள் இன்றியமையாததாக காணப்படுகின்றன. சைகைகள்முறை, புகையூட்டல், கூக்குரலிடல்,என தனது தொடர்பாடல் முறையினை ஆரம்பத்தில் வைத்திருந்த மனிதன் மொழி என்ற உன்னதமான ஊடகத்தை கண்டறிந்தமை வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாக அமைந்தமை ஈண்டு நோக்கத்தக்கது. இதன் பின்னர் புவி தட்டையானது என தம்மை மூட நம்பிக்கைகளில் மூழ்க வைத்திருந்த மனிதன் விஞ்ஞான விந்தையினால் பிரபஞ்சத்தின் மர்மங்களை மிக இவகுவான முறையிலே கண்ட கொண்டான்.ஆம் புவி கோளமானது என்பதனை நீக்கலஸ் கொப்பநீக்கஸ் என்ற விஞ்ஞானி ஆதாரங்களுடன் முன்வைத்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமே ஆகும். இதனால் தான் பேரறிஞர் வினோபாவே அவர்கள் விஞ்ஞானம், ஆத்துமஞானம், இலக்கியம என்ற முத்துறைகளின் கூட்டுறவினாலேயே மனித வாழ்வு முழுமை பெறுகின்றது என்ற தத்தவ கருத்து கூறினார்.

இவ்வாறு படிப்படியான முன்னேற்ற படிகளில் கால் வைத்து தனது வாழ்க்கையினை முன்னேற்றிய முற்போக்கு மனிதன் புவியினை விட்டு, வேற்று கிரகம் மிகையாகாது. நீல்ஆம்ஸ்ரோங், யுதிகாரின் வலற்றினாதெரஸ்கோவா, கல்பனாசௌலா, எட்வின்அல்டின்...என மனித குல விஞ்ஞான தந்தைகள் நடைபயில வித்திட்ட மகான்கள் எனவே கூறலாம்.

ஆரம்பத்தில் வானொலி மார்க்கோனி அவர்களாலும் அதனை தொடர்ந்து தொலைக்காட்சி யோன்லொஜிக்பேற் அவர்களாலும் தொலைபேசி அலைக்ஸ்சான்டர் கிரகம்பெல் அவர்களாலும் கண்டறியப்பட்டமை மனிதன் தனது அறிவுத்தேடலை விருத்தி செய்ய போதுமானதாக காணப்படவில்லை. இவற்றையெல்லாம் விஞ்சி நிற்கும் வகையிலே சால்ஸ்பகேஜ் அவர்களினால் கணினி என்ற அரிய கண்டுபிடிப்பு காலத்தினை வென்று ஞாலம் தன்னை ஆட்சி செய்யவே எனத் தோன்றிய அற்புத படைப்பு அவற்றினுள் நம் இணையம் என்ற இங்கிதமான ஈடு இணையற்ற படைப்பானது புவி என்ற பரந்து விரிந்த பாரினை என்ற

ஒரு என்ற பூகோள கிராமமாக மாற்றமடைய செய்தது சுருங்க வைத்து கொண்டது என்றால் மிகையல்ல.

வளர்சியடைந்த இன்றைய சமுதாயம் இணைய பயன்பாட்டின் பல்துறை தேவைகளிற்கும் தீர்வு கூறும் தேவையினை பூர்த்தி செய்கின்ற இன்றியமையாததாக மாற்றம் அடைந்து விட்டது. கல்வித்துறை, பொறியியல்துறை. மருத்துவத்துறை, வியாபாரம், வர்த்தகம், கணக்கியல், யதார்த்த நடைமுறைச் செய்திகள் என எந்தவொரு துறைக்கும் இன்றியமையாததாகி விட்டது. விஞ்ஞானம் மேற்கொண்ட விந்தைகளில் சற்று வித்தியாசமானது என்றே கூற வேண்டும்.

இவற்றில் குறிப்பாக கல்வித்துறையில் மாணவர்களாயினும் சரி எவருக்கும் அவர்அவரது தேவைகளினை அறிவுத்தேடல் என்ற கல்விப்பசியை நிவர்த்தி செய்து வைப்பதற்கு இன்றைய காலகட்டத்தில் ஈடு இணையற்ற மிக உன்னதமான சேவையை வழங்கி வருதல் முதலிடம் பெறுகின்றது என்று கூறினால் மிகையாகாது.

கல்வி என்ற கங்குகரையற்ற கடலில் தேடல் என்ற படகினை ஆழத்தில் இருந்து உச்சிக்கு கொண்டு செல்வதற்கு இன்று இணையம் ஈடு இணையற்ற சேவையினை வழங்கி வருகின்றது. இணையங்கள் மூலம் மாணவர்கள் தமக்கு தேவையான நூல்களின் பக்கங்கள், மற்றும் வரைபடங்கள், தகவல்கள், அறிஞர்களது கருத்துக்கள், விரிவுரையாளர்களது உரைகள்,மற்றும் ஏனைய விடயங்கள் என எந்தவொரு விடயத்தினையும் திரிபுர ஆணித்தரமாக அறிந்து கொள்வதற்கும் இணையம் இன்றியமையாத இணையற்ற சேவையினை வழங்குகின்றது.

இவற்றின் கிளிங்ரொங் என்ற அமெரிக்க நாட்டு மென்பொருள் வல்லுநர் அவர்களது கண்டுபிடிப்பான பொட்டலசேவையானது இவற்றிற்கு அதாவது அறிவுத்தேடலிற்கு உன்னத உறுதுணை புரிகிறது. குறித்த அறிஞர் கூறுகையில் அறிவுத்தேடலிற்கு இவ்வமைப்பானது மிகச்சிறந்து உறுதுணை புரிய கூடியது என்று கூறுகின்றார்.இன்றைய கல்விசீர்திருத்த கல்வி முறைமையின் குறித்த ஒரு அங்கமாக தேடிகற்றல் என்ற விடயம் காணப்படுகின்றது. இதற்கு கணிணி அறிவுள்ள மாணவனுக்கோ, நபருக்கோ இணையம் இன்றியமையாத சேவையை வழங்கும் என்பதில் எதுவித ஐயம் இல்லை. அண்மையில் அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகளின்படி பின்வரும் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு குழந்தை மாணவன் தன் அறிவிற்கும்,அதனை வளர்ச்சியடைய செய்வதற்கும் மிகச்சிறந்ததும் கையாள்வதற்கு இலகுவானதாக இணையம் காணப்படுகின்றது என்று கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக இலங்கையில் வசிக்கும் ஒரு நபர் குறித்த ஒரு துறை அல்லாத விடயம் தொடர்பாக பல தரப்பட்ட விடயங்களை அறிய ஆவல் கொண்டுள்ளார்.சற்று சில வருடங்களிற்கு முன் என்றால் அவர் தனது அறிவினை விருத்தி செய்வதற்கு தேவையான புத்தகங்கள்,மற்றும் இதர விடயங்களை பெற பல நாட்கள் மற்றும் பணம் என்பன அதிகளவில் தேவைப்படும்.

ஆனால் இணையத்தின் மூலம் மிகக்குறைவான பணச்செலவுடன் மிகவும் குறுகிய காலத்தில் வினைத்திறனான முறையில் பெற்றுக்கொள்ள முடியும். இங்கு அறிவுத்தேடலிற்கு இன்றைய காலத்தில் இணைய செல்வாக்கு பயன்பாடு மற்றும் பங்களிப்பு என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு ஒரு பக்க கல்வி அறிவு என்ற பயிருக்கு அதனை செழிக்க செய்ய பசளையிடும் இணையம் சிறப்பிற்குரியதே எனினும் மறுபக்கம் அதனை எதிர் மறையாக நோக்குகின்ற சமுதாயம் சற்று பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றே கூறவேண்டும்.ஆம் இன்று எமது நாட்டில் கூடிய சமூகம் தடம்புரழ்வதற்கான வாய்ப்பினையும்

இணையத்தளங்கள் ஏற்ப்படுத்தி ஏற்படுத்தி விடுகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

உலகிலேயே பல துன்பங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கான தீர்வுகளும் இங்கே தான் காணப்படுகின்றன என்று கூறுகின்றது. அயர்லாந்து நாட்டினது பழமொழி நிச்சயமான இணையத்தால் சமூகக்கட்டுகோப்பு சீர்குலைவு அடைவதற்கான வழிமுறைகளை தவிர்த்து கொள்ள முடியும். ஒரு புறம் இளஞ்சந்ததி அறிவுத்தேடலின் பயனை அனுபவிக்கின்ற போதிலும் கூட மறுபுறம் தீய வழியிலான அறிவுத்தேடலும் இளங்சந்ததியிடம் நிலைபெற்று விடுமோ ? என்ற எண்ணமும் எழத்தான் செய்கிறது. ஒழுக்கம் குன்றிய சமுதாயம் உருவாகி விடுமோ? ஏன்ற அச்சம் எமக்குள் சற்று எட்டிப்பார்க்கிறது.

உலகம் முன்னேறி விட்டது. அறிவுப்பசி எம்மை ஆட்கொண்டு விட்டது. விண்வெளியில் கூட வீறுநடையில் மனிதன் காத்திருக்கும் விஞ்ஞானத்தின் விந்தையின்கரம் வெகு தூரம் இல்லை. இணையம் அறிவுத்தேடவிற்கு உரிய தீனி போட காத்திருக்கிறது.

வழிநடக்க வருகவே - வழமை

கொள்ள வருகவே

பொழுது புலரும் வேலையாச்சு போகவேணும் வருகவே….

ஏன்கின்ற கவிஞர் கே.சி.எஸ்.அருணாசலம் அவர்களது கவிதை வரிகள்,சமுகம்,இணையத்தினை சரியான வழியில் பயன்படுத்த முன்னேற்ற அறிவுத்தேடலை பூரணமாக்க இன்றே எழுவோம்.நன்றே செய்வோம், இணைய பயன்பாட்டின் பூரண பயனை அனுபவிப்போம்.

இ.சுசிலா

கலைப்பிரிவு 2013

## பதினாறு பேறுகள்

| | |
|---|---|
| 1. புகழ் | 2. கல்வி |
| 3. வல்லமை | 4. வெற்றி |
| 5. நன்மக்கள் | 6. பொன் |
| 7. நெல் | 8. நல்லூழ் |
| 9. நுகர்ச்சி | 10. அறிவு |
| 11. அழகு | 12.பெருமை |
| 13. இளமை | 14. துணிவு |
| 15. நோயின்மை | 16. ஆயுள் |

## "நீதிக்கதை"

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான்.

மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே,உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

மான்சன்

தரம் 11

# வாருங்கள்... உலகாளுவோம்.

பணத்தை மட்டுமே குறிக்கோளாக வைத்து வாழும் ஒரு நாடு என்றும் அடிமையாகவே இருக்கும் என்கிறான் அறிஞன் காரல் மார்க்ஸ்.

இன்றைய இளைஞர்கள் தன்னை பணத்திற்காக வெளிநாட்டுக்காரனிடம் விற்பதை பெருமையாக கருதுகிறார்கள். பெரும் தொழிலதிபர்களாக வாழ்ந்த எம் இனம் இன்று தொழிலாளர்களாக மாறிப்போனது தான் இதில் மறைக்கப்பட்ட உண்மை.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டறியும் முன்னரே நாம் ரோம் நகரம் வரையிலும் வணிகம் செய்திருக்கிறோம். உலகின் எல்லா நாகரிகங்களும் நம்மிலிருந்தே உருவாகி இருக்கிறது. உலகில் மனிதன் தோன்றியது ஆப்ரிக்காவில் தான் என்றாலும்,அவன் மனிதனாக வாழ கற்றுக்கொண்டது எம் மண்ணில் தான். நாம் என்றுமே பணத்தை பதுக்கியவர்கள் இல்லை பங்கிட்டுக் கொடுத்தவர்கள்.

பணத்திற்கென முதன் முதலில் குறியீடு கண்டவர்கள் நாம் தான். சங்க காலத்திற்கு முன்னமே நம்மிடம் குறியீடுகள் இருக்கின்றன. நம் தமிழில் 25 இலக்கங்கள் (Digits) வரையிலும் பெயர்கள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் 10 இலக்கம் வரை மட்டுமே இருக்கிறது. இப்படிப்பட்ட பேரினம்இ நலிவடைந்து போனதற்கு நாமே காரணம்.

உங்களுக்கு தெரியுமா... உலகின் மிகப்பெரிய மூன்றாவது பேரரசை நிறுவிய அருண்மொழித் தேவனின் (தஞ்சை பெரிய கோவிலை கட்டிய இராஜராஜ சோழனின் இயற்பெயர்)பேரப்பிள்ளைகள் நாம். அப்பேரரசு இன்றைய அமெரிக்காவை விட 5 மடங்கு பெரியது.

தகப்பன் பெயர் தெரியாது இருப்பது எப்படி இழிவோ அப்படித்தான் நம் வரலாறு தெரியாது இருப்பதும். நாம் உலகின் மூத்த குடிமக்கள். இந்த திமிர் வேண்டும் நமக்கு.

நான் உங்களை நாடாள அழைக்கவில்லை. வாருங்கள்... உலகாளுவோம்.

ஜீ.ரஜீவன்
11B

'எதற்கும் அஞ்சாதேஎதையும் வெறுக்காதேயாரையும் ஒதுக்காதே உன் பணியைஊக்கமுடன் செய்.

*அரவிந்தர்*

"அஞ்சாதவனும் ஆசைப்படாதவனும் உண்மையானஉயர்ந்தமனிதன்"

*சார்லஸ்*

"அச்சத்தைவெல்வதேமுதல் வெற்றி"

*கார்லைல்*

"மனிதன் என்பதற்குஅடையாளமே,அறிவுடன் இருப்பதுதான் முதலில் மனிதன் மனிதனாக இருக்கவேண்டும். இரண்டாவதுஅவன் அறிவுள்ளவனாக இருக்கவேண்டும்"

*தந்தைபெரியார்*

## ஊடகங்களும் தமிழ்மொழி வளர்ச்சியும்

ஆதி காலத்திலிருந்தே இன்றைய சமுகம் வரை எல்லா மட்டங்களிலும் ஒரு வகையிலான தொடர்பு முறைகள் இருந்து வருகின்றன. இத தொடர்பு முறைகள் சமுக நடவடிக்கைகள் சீராக நடை பெறுவதற்க்கும், பண்பாட்டுக் கையளிப்பினை மேற் கொள்வதற்க்கும் வழி ஏற்ப்படுத்துகின்றன. ஆதி காலத்தில் தூது, முரசறிதல் என்ற நிலையிலிருந்து பாரிய மாற்றம் பெற்று பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் என எத்தனையோ ஊடகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளது. அவை தாம் வளர்ந்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்திற்க்கு தேவையானவற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றன. இச் சாதனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிவருகின்ற பங்க வியந்து கூறக்கூடியதாகும்.

மிகப் பழமை வாய்ந்த தொடர்பு ஊடகமான பத்திரிகை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பங்காற்றி வருகின்றது. பத்திரிகைகள் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அடிப்படையானது. எழுத்துருவாக்கம், நிலை வேறாக்கம், புதுமையாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் போன்றவற்றிற்க்கும் பத்திரிகைகள் முன்னோடியாக விளங்குகின்றன எனலாம்.

இந்தியாவின் கி.பி 1780இல் பத்திரிகை இதழ் வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதல் இதழ் இதுவாகும். இதனைத் தொடர்ந்து தினவர்த்தமானி, சுதேச மித்திரன் போன்றன தோற்றம் பெற்றன. இவை செய்திகளோட அவ்வப்போது இலக்கிய விடயங்களையும் வெளியிட்டன. பாரதியாரால் தொடக்கப்பட்ட இந்தியா, விஜயா போன்ற பத்திரிகைகளும் தமிழ் இலக்கியப் பணியை முழுமூச்சுடன் செய்யத தொடங்கின.

தமிழ் மொழி வளர்ச்சியில் சஞ்சிகைகளும் தமது பங்களிப்பினை செலுத்தாமலும் இல்லை “மணிக்கொடி, கலைமகள், ஆனந்தவிகடன்” போன்ற சஞ்சிகைகள் தோன்றின. தமிழ் இலக்கிய வரலாற்றில் மணிக் கொடிக்கு தனியானதோர் இடமுண்டு தற்காலத்தில் பல்லாயிரக்கணக்கான சஞ்சிகைகள் விற்பனையாகின்றன.

இலங்கையில் 1841இல் யாழ்ப்பாணத்திலிருந்து உதயதாரகை என்ற சஞ்சிகை மாதம் இருமுறை வெளிவந்தது. 1891ல் உதயாதித்தன், இலங்கை நேசன் போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன. இவை கிறிஸ்தவ மதமாற்றம் கருதி வெளியாகியவை ஆகும். ஆனால் இந்தப் பத்திரிகைகள் ஊடாகவே வேற்று மொழி இலக்கியங்களின் தாக்கம் தமிழ் இலக்கியத்திற்க்கு ஏற்படுகின்றது. 1930களில் ஆரம்பிக்கப்பட்ட தினந்தபால், வீகேசரி,ஈழகேசரி ஆகிய பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயற்படத் தொடங்கின. இருப்பினும் தமிழ் வளர்ச்சியலை அதகை பங்கு கொடுத்துதது ஈழகேசரியே ஆகும்.

எந்தவொரு விடயத்தையும் மக்களிடம் விரைவாகவும் தெளிவாகவும் எடுத்துச் செல்வதில் வானொலி, தொலைக்காட்சி என்பன செல்வாக்கு செலுத்துகின்றன. தமிழ் மொழி வளர்ச்சியிலும் வானொலியில் பங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவு இடம்பெற்று வருகின்றன. மக்களின் மனங்களில் விரைவாக மாற்றத்தை ஏற்படுத்தும் தொலைக்காட்ச்சி பல விடையங்களை மக்களிடம் கொண்டு செல்கின்றன. இந்தியாவில் இருபத்தைந்திற்க்கும் மேற்ப்பட்ட தமிழ் தொலைக்காட்சி நிலையங்கள் உள்ளன. ஆவற்றின் சன்ரீவி, ராஜ்ரீவி போன்றவையும் இன்னும் பலவும் தமிழ் இலக்கியத்துறைக்கு அவ்வப் பொழுது தமது மொழி வளர்ச்சியில் இத் தொலைக்காட்ச்சிகள் சில நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி ஒலிபரப்பி வருகின்றன.

இலங்கையில் ரூபவாகினி அலைவரிசை, சக்திரீவி போன்றன தொலைக்காட்சியின் தமிழ் அலைவரிசைகளாகும். மறைமுக வர்த்தக நோக்கங்களை கொண்டு செயற்பட்டாலும் தம்மால் முடிந்த வரை தமிழ் மொழியின் தொடர் வளர்ச்சிக்கு இத்

தொலைக்காட்சிகள் தமது பங்களிப்பினை ஆற்றி வருகின்றன. இக் கால கட்டத்தில் தகவல் யுகத்தின் பிரதான சாதனம் இணையமென்றால் மிகையாகாது.

20ம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி குறித்து பிற்க்காலத்தில் திரும்பிப் பார்க்கும் போது தமிழும் கணிப்பொறிநுட்பமும் கைகோர்த்துக் கொண்ட ஒரு அற்புத நிகழ்வாகும். தமிழில் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த ஊடகம் இணையமாகும்,

இணையத்தில் தமிழர்களின் தொடர்பாடல் ஆசியாவில் உள்ள ஏனைய மொழிகள் அனைத்துடனும் போட்டி போடக் கூடிய அளவுக்கு முன்னேறியுள்ளது. நாம் ஒரு பண்பாட்டுத் தமிழ் உறவை வேறு ஊடகங்கள் மூலம் சாத்தியப் படுத்த முடியவில்லை ஆனால் மகத்தான வியுகங்களை அமைக்காமலேயே அதனை இணையம் சாதிக்கின்றது. இவை யாவும் இணையத்தின் மூலம் தமிழ் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சிகளே ஆகும்.

இந்த வகையில் மொழி ஊடகங்களின் மூலமாகவே நிலைத்து நிற்கின்றது. தொடர்ந்து நிலவுகின்றது பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தமது பங்கினை ஆற்றியுள்ளதையும் ஆற்றிக் கொண்டிருப்பதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

றெ.அன்ரனி றோலன்ற்
12 கலை (2014)

## பொதுக்குறிப்புகள்

- ❖ வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் இருந்தால் அது வெற்றியை பாதிக்கும்.
- ❖ தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக இருந்தால் ஏமாற்றம் அடையாதீர்கள். காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பாருங்கள். தவறைத் திருத்திக் கொள்ளுங்கள். வெற்றியும், தோல்வியும் எதிரிகள் அல்ல. தோல்வியில் இருந்து கற்றுக் கொள்வதே வெற்றிக்கு சரியான வழி.
- ❖ கற்பதில் ஆர்வம் காட்டுங்கள். பாடத்திட்டதைவிட அதிகமாகக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அதிக அறிவு பாடங்களை எளிதாகும்.
- ❖ ஒவ்வொரு நிலையிலும் தன்னம்பிக்கை கொள்ளுங்கள்.
- ❖ தேர்வுக்கு முன்பே அனைத்துப் பாடங்களையும் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். கடைசி நிமிடம் வரை அவசரம் வேண்டாம்.
- ❖ உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள்; வெற்றி உங்களுக்கே

## தமிழ்மொழி

அகிலம் போற்றும் நல்ல மொழி
அகரம் ஆதியாய் கொண்ட மொழி
அன்பு நிறைந்தது இந்த மொழி
அறச் சொற்கள் பலவும் கொண்ட மொழி

இயலிசை நாடகம் கொண்ட மொழி
இனிமை யாவும் தந்தமொழி
இலக்கண இலக்கியம் படைத்த மொழி
இன்றைய உலகின் பழைய மொழி

உண்மையை என்றும் உணர்த்தும் மொழி
உயரிய வாழ்வைத் தரும் மொழி
உவமைகள் பலவும் கொண்ட மொழி
உருபுகள் யாவும் தந்தமொழி

கம்பன் கவியில் வாழும் மொழி
காளமேகரின் நாவில் தவிழ்ந்த மொழி
காவியம் பலவும் கொண்ட மொழி
காலம் கடந்த செம்மொழி

வள்ளுவன் வரியினி வந்த மொழி
வரலாறு பலவும் படைத்த மொழி
வாயினில் சொல்ல இனிக்கும் மொழி
வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்தும் மொழி

பாரதி பாட்டில் வந்த மொழி
பாவையர் மனதைக் கவரும் மொழி
பாவயர் சேர்ந்தே வாழ்த்தும் மொழி
பாரினில் இனிய தமிழ்மொழி……..

பா.மதுஜினி
வர்த்தகம் 12 (2014)

# நட்பு

உன்னால் முடிந்தது ஒரு கணப்பொழுதில்
சட்டென்று நம் நட்பைத் தூக்கி வீச
நான் குப்பைத் தொட்டியே- நீ வீசியதை
நான் சேகரித்து வைத்திருக்கிறேன்

எப்போது வேண்டுமானாலும் பார்
பழைய நினைவுகளை- நீ
தூவிச் சென்ற புன்னகைகளை
பொக்கிசமாக பத்திரப்படுத்தி உள்ளேன் நான்

நீ வாசிக்காமலே வீசி எறிந்த
நம் நட்பின் கவிதைகளை இன்றும்
நான் சுமக்கிறேன் வரிகளோடும்........
வார்த்தைகளோடும்.........

ம. ஆனல்ட் சரண்சன்
13 கலை (2014)

> "நாம் நமது எண்ணங்கள் மீது கவனம் வைக்க வேணடும். கெட்ட எண்ணங்கள் மிகவும் ஆபத்தான திருடர்கள்"
>
> ஸ்ரீ அன்னை

## விடிவு

அம்மா என்பவர் அன்புக்கு - நம்
அப்பா என்பவர் அறிவுக்கு
ஆசான் என்பவர் கல்விக்கு - தமிழ்
சொல்வது எந்தன் நினைவுக்கு!

செல்வம் சேரும் உழைப்புக்கு- தமிழ்
கல்வி ஊறும் படிப்புக்கு
பக்தி சேரும் அன்புக்கு - வழி
நன்றாய் கிடைக்கும் வாழ்க்கைக்கு!

சிறப்பாய் வாழ்வது நன்றாகும் - பல
நன்மைகள் செய்வது சிறப்பாகும்
அன்புடன் வாழ்வது பண்பாகும் - உயிர்
அனைத்திலும் வைப்பது அன்பாகும்!

மழையும் பெய்வது மண்ணுக்கு - பயிர்
ஓங்கியும் வளர்வது உணவுக்கு
உழைத்து வாழ்வது உயர்வுக்கு - அது
உனக்கே தெரியும் மனதுக்கு!

ஒற்றுமை என்பது உறவுக்கு – கொடும்
பகையை வளர்ப்பது பிரிவுக்கு
சத்தியம் என்பது விடிவுக்கு - அது
தரணியில் தெரியும் மனிதர்க்கு!

லெ.ரஸ்மி

13 கலை (2014)

## நெஞ்சம் கனக்குதே

நெஞ்சம் கனக்குதே - இந்த
நிலையில்லா உலகத்தை நினைத்துவிட
இன்பங்கள் வருகிறது - அவை
வந்த கனத்திலே மறைகிறது

மனிதம் மறைந்து விட்டது வெறும்
மனிதரகள் மட்டுமே வாழ்கின்றனர்
உண்மைகள் பல புதைகிறது - அதை
நினைக்கையில் உள்ளம் கனக்கிறது

கலை வெறி அடங்குகின்றது - மனக்
காம வெறி அலைகிறது
பெண்ணியம் நிலை குலைகிறது - பல
மேதையர் உள்ளம் கனக்கின்றது

விஞ்ஞானம் வளர்கிறது இதனால்
வெளி உலகம் வளர்கிறது
தவறுகள் நன்றாய் நடக்கிறது
தப்புவதற்க்கு வழியும் கிடைக்கிறது

பாரம்பரியம் மறைக்கப்படுகிறது
பழக்கவழக்கம் மாறுகிறது
வரவுகள் சிலவாய் அதிகரிக்கின்றது
செலவுகள் பலவாய் விரிவடைகிறது

ஒழுக்கம் பலவாய் குறைகிறது
ஒப்புரவு விட்டுச் செல்கிறது
கனவுகள் பலவும் கனக்கிறது
கவிதைகள் பலவும் பிறக்கிறது
கண்டுபிடிப்புக்கள் நிகழகின்றன - அவை

குண்டுவீச்சுக்கள் நிகழ்த்துகின்றன
உதிரம் ஆறாய் பாய்கிறது
உள்ள உணர்வுகள் கலைகிறது

மதுவும் மாதுவும் விரும்பப்படுகிறது - பல
பல விளைவுகள் வாழ்வில் வருகிறது
நிம்மதி மறக்கப்படுகிறது- அதனால்
நெஞ்சம் நன்றாய் கனக்கிறது

கொடுமைகள் பல பிறக்கின்றன - அவை
கொலைகளைச் செய்ய வைக்கின்றன
நினைவுகள் எல்லாம் அழிகின்றன
நினைக்கையில் நெஞ்சம் கனக்கிறது

கடுமை வேலை நடக்கிறது
கடவுள் பக்தி மறக்கிறது
அணுக்கள் கூட அசையாமல்
ஆபத்து பலவாய் நிகழ்கிறது

ஆசான் பெருமை மறக்கிறது
அறிவுவளமோ குறைகிறது
பெற்றோர் பெரியோர் மனம் கலங்குகிறது
நல்ல செயல்கள் பல குறைகிறது

பஞ்சமா பாதமும் புகுகிறது
பாவச் செயல்கள் நிறைகிறது
வாழ வழியோ தெரியவில்லை
நெஞ்சம் நன்றாய் கனக்கிறது

க. சுவேதா
கலை 13

## தொலைந்து போன அமைதி

இறைவன் சிருஸ்டித்த உலகில்
வியந்து நிற்க்கும் மனிதர்கள்
விடியலுக்காய் ஏங்கி நிற்க்கின்றோம்
தமிழா! நீ கற்றதுவும் தகாத செயல்

அந்நியப் பயணிகளுக்கு அமுதசுரபியாய்
விளங்கிய எம் தாய்த்திரு நாடு
இன்று தொலைந்து போன அமைதியைத்
தேடித் தேடித கால்கடுக்க நிற்க்கிறது

நிற்க இடம் கூட இல்லாமல்
அநாதையாய் தெருவில் அல்லாடுகிறது
அன்றிருந்த காலம் இன்று எங்கோ!
காலங்கள் மாறலாம்
மனித இனம் மாறலாமா?

மாறுபட்ட மனித இனம் இனவெறிக்காய்
படுகொலைகள் செய்து பட்டுப்போன மரங்களாய்
எம்மைத் துளிர்க்க விடாது – எம்மை
துண்டாடிய மனித இனமோ நீ!

நடுத்தெருவில் நாதியற்று நிறக்கும்
எம் தமிழ்த் தாய் மக்களிற்க்கு
அமைதி தான் எப்போது
கேள்விக்குறியாய் நிற்க்கிறது நமது வாழ்வு

காலனவன் குறித்த விதியை
தமிழா! நீ மாற்றியது உன் விதியோ!
விதியை மதியால் வெல்லாம் என
நினைத்த எம் மக்களின் மதி
அமைதியிழந்து நிற்க்கின்றது

மனித இனத்தில் மனிதம் அழிந்து
மனிதர்கள் மட்டுமே எஞ்சியிருக்கிறார்கள்
எமது தாய் மண் அமைதியிழந்து நிற்பது
அந்தோ பரிதாபம்

அமைதியாய் இருந்த ஆழியைக் கூட
பூகம்பம் உலுக்கியது போனறு
ஆமைதியாய் இருந்த மனித இனத்தை
சூறையாடிய அரக்கனே
நீயும் ஒரு மனிதன் தானோ?

வேட்டுச்சத்தங்களும் வெடி குண்டுகளாலும்
எமது தாய்நாட்டை இரத்த வெள்ளத்துள்
மிதக்க விட்டு வேடிக்கை பார்க்கும்
ஈனப்பிறவியும் இவ்வுலகில் உண்டோ?

மனிதனை இறைவன் ஒருவனால்
மட்டுமே அழிக்க முடியும் என
நினைத்த எமது உலகின் நியதியை
மாற்றியமைத்த கொடூர அரக்கர்களும்
இவ் உலகில் உண்டோ

கையிழந்து கால் இழந்து
முழு மனிதனாய்ப் பிறந்த எம்மை
பேதை மனிதனாக்கி மகிழ்வடையும்
மட்டமான மனிதர்கள்
இவ் மண்ணை விட்டு நீங்கார்களோ?

சிறகுகள் இல்லாத பறவைகள் தான்பிறந்திடுமோ?
நான்கு கால்கள் இல்லாமல் விலங்குகள் நடந்திடுமா?
அது போல் அமைதி இல்லாத மனித இனம்
உலகில் நிலைத்திடுமோ?

சொத்திழந்து, சுகமிழந்து, கல்வியிழந்து
கேள்வியிழந்து, கற்ற ஒழுக்கமும் இழந்து
கட்டுக்கோப்பான வாழ் விழந்து
இழப்பகளிற்கு மட்டுமே விலைபோகும்
எம்மை அமைதிதான் அணுகுமா?

தாயின் கருவறையிலிருந்து
உதிக்கும் சூரியனை
கருவறையிலே இருட்டாக்கும்
பாவப்பட்ட பாவிகள் நீங்களா!
வழிப்பறிக் கொள்ளை போல்
பெண்களின் கற்புகளை சூறையாடிய
வேங்கைகளும் நீங்களோ!
வெறிபிடித்த கட்டாக்காலி நாய்களும் நீங்களோ?

சுகத்தை காலை உணவாய்
அமைதியை மாலை உணவாய்
சுதந்திரத்தை இரவுணவாய்
உண்ணுகின்ற பேருண்ணிகளும்
நீங்களோ?

மனிதன் மனிதனாக வாழவேண்டும்
இல்லையேல் பட்டமரமாக பயனற்று இருக்க வேண்டும்
மனிதன் பாதி மிருகம் பாதி என்ற இருவேங்கள்
நம் வாழ்வையே பாதியபக்கி விடும்

கல் கொண்டு சிலை கொய்யும் கலைஞன் கூட
கல்லிற்க்கு உயிர் கொடக்கும் போது
மனிதனாய் பிறந்த நாம் உயிரை எடுப்பது
பாவமன்றோ!

நெஞ்சம் வலிக்குதே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி அஞ்சி வாழும் இந்த அவல வாழ்க்கை எல்லாம்
மறைந்து போகும் காலம் தான் எது?

நமது வாழ்வில் சென்ற யுகங்களை
திரும்பப் பெற முடிந்தால்
தொலைந்துபோன அமைதி கூட
நம் வசமே......

ம. பிரதீபா
13 கலை (2013)

**நான்கு வகைக் கவிகள்**

ஆசுகவி - மற்றவர் புகழ் பாடி அவர்கள் உதவி நாடுபவர்கள்.
மதுரகவி - மொழிநயத்துடன் கூடிய இனிய கவி பாடுபவர்.
சித்திரகவி - கவிதை வரிகளால் கவிபாடுபவர்கள்.
வித்தாரக்கவி - ஏதோ ஒரு பொருளைப் பற்றி விரித்துக் கவிபாடுபவர்.

## கிடைக்காத சுதந்திரம்

கற்ற கல்வி உனக்கு
உற்ற தோழியாயிருக்கும்
நெஞ்சிலே துணிவுக்கு

உண்மையும் நேர்மையும்
உன் உள்ளத்தில
எண் கண்ணே உனக்கு
காலில் மிதிக்கும் உறவு எதற்கு

வாழும் வழிகள் பலவிருக்கு
வாழ்ந்து காட்டு உலகிற்கும்
நம்பிக்கை எனும் விளக்கிற்கு
எப்போதும் ஒளி இருக்கும்

மழைத்துளிபோல் கருத்துக்கள் இந்த
எம் அறிவை புகட்டி
நல்வழி என்றும் நாம் வாழ
எம் கல்வியே மகத்துவம் போற்றி

ஆக்கம்:-
யே. யோசப்பிரதீபன்

## பன்மை கலாசாரம் ஊடாக சமாதானம்

உன்னத இறைவன் உன்னத சமாதானம்
உள்ளத்தில் இல்லத்தில் நாட்டில் உலகில்
உசத்தியாய் இருந்திட உளைப்பவர் பலராயினும்
உயரிய சமாதான தனிநபரிற்கே

சமாதானம் என்னும் வெண்புறாவே
சத்தம் இன்றி நீ எங்கே இருக்கிறாய்
சாதிமத பேதங்கள் நிறை உலகில்
சாந்தமாய் வருவது எப்பொழுது

போரின் எறிகணைகள் புனைந்த போதிலும்
போரின் வடுக்களை மறைத்து வருவாய்
ஆலமரம் போன்ற பரந்த உலகில்
ஆதவனாய் பறந்ததும் ஏனோ?

அ. அருண்
தரம் - 11B

"அன்பு மற்றும் கருணை என்பதில் புனிதமான, புனிதமற்றது என்ற வித்தியாசம் இல்லை. அன்பு எப்போதும் தெய்வீகமானது. இறைவன் அன்பு மயமாவே இருக்கிறான்"

ஓஷோ

"சோம்பல் எல்லா செயல்களையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு எல்லா செயல்களையும் எளிமையாக்கும்"

பெஞ்சமின்.ஃப்ராங்க்ளின்

## படிபடி

அறியாமை இருளகற்ற
அகன்ற நுல்கள் படிபடி
அன்பும் பண்பும் விறிவடைய
அற நூல்களை தேடிப் படிபடி

விஞ்ஞான உலக நோக்கு
விரிவதற்கு படிபடி
அஞ்ஞானம் அகல்வதற்கு
அதுவேதான் வழி படிபடி

பரீட்சைக்காகப் படிபடி
பாரை மாற்றப் படிபடி
பழையசேற்றில் இருந்து மீள்வதற்கு
பகுத்தறிவுள்ள நூல்கள் பல படிபடி

மக்கள் பாடும் துயரநிலையை
மாற்றுவதற்கு படிபடி
மகிழ்ச்சியான உலகம்காண
மார்க்கமாகத்தேடிப படிபடி

ஆக்கம்:- பி.சியான்சன்

தரம்:- 11B

"எண்ணம், செயல், பேச்சு இந்த மூன்றிலும் சத்தியத்தைப் பின்பற்றுபவனே எல்லாம் அறிந்த ஞானி"

காந்திஜி

# தமிழ் மாதங்கள் கூறும் பழமொழிகள்

தை பிறந்தால் வழிபிறக்கும்
தமிழர் வாழ்வில் வளம் கொழிக்கும்
மாசியில் மங்கலம் சூடிடும்
புது வரவுகள் பொங்கிடும்
பங்குனியில் ஊரெங்கும் திருவிழா
தெருவெங்கும் தேரோட்டம்
சித்திரையில் வெயிலை இளநீர் பதநீர்தணிக்க
சித்திரை விழாக்கள் கோலாகலமாகும்
வைகாசியில் வைபோகம் கன்னியரும் காளையரும்
மணமாலைகள் சூடிட மங்கலமாகிவிடும்
ஆனியில் உச்ச வெய்யில் தணியும்
ஊரெல்லாம் மெல்லிய தென்றல் வீசும்
ஆடியில் ஆறுகளில் புதுப்புனல் பொங்கிடும்
உழவு ஆடிப்பட்டம் தேடி விதைக்கும்
ஆவணியில் வந்ததும் நல்வரவும் வந்திடும்
தடைகள் நீங்கி சுபகாரியங்கள் நிகழ்ந்திடும்
புரட்டாதி விரதம் மாந்தரின்
மனதை பக்குவப்படுத்த உதவிடும்
ஐப்பசி மழை அடைமழை
ஊரெல்லாம் தீவு போல் காட்சியளிக்கும்
கார்த்திகையில் இல்லந்தோறும் அகல் விளக்கு
ஒளிர்ந்திட நன்மைகள் குடிபுகுந்திடும்
மார்கழியில் குளிரில் வாசல் கோலங்களும்
வயல்களில் வசந்தங்களும் பூத்திடும்

ஆக்கம்: ச.யசோதரன்
தரம் 11

## கல்வி

கற்க கல்வி உனக்கு
உற்ற தோழியாய் இருக்கு
நெஞ்சில் துணிவிருக்கு
வஞ்சிலே வலி எதற்கு!

உண்மையும் நேர்மையும்
உன் உள்ளத்திலிருக்கு
என் கண்ணே உன்னை
காலில் மிதிக்கும் உறவெதற்கு!

வாழும் வழிகள் பலவிருக்கு
வாழ்ந்து காட்டும் உலகினுக்கு
நம்பிக்கை எனும் விளக்கிருக்கு

ஆக்கம்:- சி.தேனுஜன்
தரம்:- 9B

"ஒருவன் ஒன்றை உண்மையேயென்று ஆராய்ந்து உறுதி செய்து விட்டால் அதைச் செய்துமுடிக்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்பட்டு விடும்"

கெதே

## யார் பொறுப்பு?

கடல் வற்றினால்
அலை பொறுப்பாகுமோ? - காணும்
கனவு பொய் யென்றால்
விழிகள் பொறுப்பாகுமோ?

முகில்கள் நிலவை மறந்தால்
வானம் பொறுப்பாகுமோ?
உள்ளே முத்து இல்லை -என்றால்
உடைந்த சிப்பி பொறுப்பாகுமோ?

கற்பனை பிழை என்றால் கண்ட
காட்சி பொறுப்பாகுமோ? –உரைத்த
கருத்து பிழை யென்றால்
மொழிகள் பொறுப்பாகுமோ?

இலக்கு பிழை என்றால்
முயற்சி பொறுப்பாகுமோ? –வாழ்வில்
இன்பம் இல்லை யென்றால்
இதயம் பொறுப்பாகுமோ?

என் கற்பனை தவறென்றால் - சுற்றும்
பூமி பொறுப்பாகுமோ?
கவிதை பிழை என்றால் - எழுதும்
எழுத்து கோல் பொறுப்பாகுமோ?

வி.வேக்மன்
தரம் - 9A

## அம்மா கவிதை

உன்னுள் கருவேற்றி
ஈரைந்து மாதங்கள்
கருவறையில் சுமந்து
உன் கண்ணீருக்கும்
என் அழுகைக்கும்
இடையே மறுப்பிறப்பெடுத்தவள்

என் அழுகைக்கு
நேரம் அறிந்து
காரணம் அறிபவள்

நான்
நடை பழக
எனக்கு கால்களாக
இருந்தவள்

நான் விழுந்து
அழும் முன்னே
கண்களில் நீர்கோர்த்து
என் வலி உணர்பவள்

நான் படிக்கும் வயதில்
தூக்கத்தை தொலைத்தவள்

உள்ளத்தில் வேதைனை
பல இருந்தும்
நெஞ்சத்தில் வைராக்கியத்தோடு
என்னை வளர்த்தவள்

அதிக வேலையென்றாலும்

என்னை தூங்க வைக்க
தன் தூக்கம் தொலைத்தவள்

என் உடல்நிலை கோளாறில்
தன்னை வருத்திக்கொள்பவள்

இன்றும்எனக்கு
இரண்டாம் உயிராய்
வாழ்பவள்

உன்னை வர்ணிக்கும் அளவு
கவிஞன் ஆகிவிட்டேனோ
தெரியாது ஆனால்
என்னை கவிஞன்
ஆக்கி விட்டதும்
நீ தான்

சொல்லியவன்
பிழை ஏதும் இல்லாமல்
சரியாக சொல்லியிருக்கிறான்
மாதா
பிதா
குரு
தெய்வம்
என்று இதில்
உன்னை மறந்திருந்தால் வாக்கிய
பிழையாக மாறியிருக்கும்

கையேந்துபவன் கூட
அன்னையின் பாசத்தில்
வீழ்ந்தவனாய்

அம்மா என்றே

அழைக்கிறான்

உனக்கு

ஆஸ்கார் பரிசோ

நோபல் பரிசோ

வாழ்நாள் தியாகி பட்டம்

ஏதும் தேவையில்லை

நான் உன்னை

தினம் தினம்

அழைக்கும்

“அம்மா“என்ற

சொல்.......

## கற்க வேண்டிய பத்து விடயங்கள்

அன்னையிடம் :- அன்பைக் கற்க வேண்டும்

தந்தையிடம் :- ஒழுக்கத்தை கற்க வேண்டும்

ஆசிரியரிடம் :- நல்ல கல்வியைக் கற்க வேண்டும்

மதகுருவிடம் :-தெய்வ பக்தியைக் கற்க வேண்டும்

நண்பனிடம் :- நட்பைக் கற்க வேண்டும்

அண்ணனிடம்:- அறிவைக் கற்க வேண்டும்

மனைவியிடம் :- வாழ்க்கையைக் கற்க வேண்டும்

குழந்தையிடம் :- பாசத்தைக் கற்க வேண்டும்

நாயிடம் :-நன்றியைக் கற்க வேண்டும்

பெண்ணிடம் :- பொறுமையைக் கற்க வேண்டும்

ஸ.யோன் கீற்

கலை 2013

## கல்வி அன்றும் இன்றும்

கல்வியின் மகத்துவம் ...!
கல்வி என்றால் கவலை ..
என்றிருந்தனர் அம்மக்கள்...!
கல்வி என்றால் கற்பு ..
என்கின்றனர் இம்மக்கள் ...!!

ஆதரவு அற்று கிடந்தது ...
கல்வி அந்நாளில்...!
ஆதிக்கம் அடைந்தது..
கல்வி இந்நாளில்...!!

உழைப்பு ஒன்று போதும் ..
உயிர் பிழைக்க...
என்றிருந்தனர் அம்மக்கள்..!
கல்வி என்று ஒன்றும் ..
கட்டாயம்...
என்கின்றனர் இம்மக்கள்...!!

அடுப்பு ஊதும் பெண்களுக்கு..
படிப்பு எதற்கு???..
என்றிருந்தனர் அம்மக்கள்...!
ஆண்டி ஆனாலும் ..
கல்வி கற்போம்...
என்கின்றனர் இம்மக்கள்..!!

வயிற்றுபிழைபிற்காக கல்வி ..
கற்றோர் அம்மக்கள்...!
கல்விக்காக கயவர்
ஆகின்றனர் இம்மக்கள்..!!
பணம் பத்தும் செய்யும் ..
என்றிருந்தனர் அம்மக்கள்...!
படிப்பு பணத்தை ..
காட்டிலும் பெரிது..
என்கின்றனர் இம்மக்கள்..!!

பணம் இல்லாவிட்டால் ..

அரசனும் ஆண்டிஆவான்..!!

அனால்..!

கல்வி அறிவுப்பெற்றால் ..

ஆண்டியும் அரசனாவான்..!!

இறுதியாக நமக்கு...

அழகான அறிவும்..

ஆதரவான வாழ்கையும் ...

இயல்பான இன்பமும்...

ஈடுஇல்லாத தைரியமும்..

உலகத்தின் உண்மையையும் ..

ஊனத்தின் ஊக்கத்தையும்..

எண்ண முடியாத எண்ணங்களையும்..

ஏற்றம் மிகு வாழ்க்கையும்..

ஐயங்கள் அகலவும்..

ஒன்றுப்பட்டு வாழ்வதும்..

ஓய்வின்றி உழைத்தலும் ...

அவ்வை பெற்ற அனுபவங்களும்...

ஆகிய இவ்வனைத்தும் ...

கல்வி என்ற ஒன்றால் ..

கட்டாயம் பெற முடியும்...

எனவே அனைவரும் கல்வி கற்ப்போம்..!!

கற்க இயலாதவர்களுக்கு கற்பிப்போம்...!!

ஜீ.மிலோஜன்

8B

## மழை தந்த வாழ்வு

நீல வானம் இருண்டது
தேடிய மேகம் திரண்டது
மேளம் போல இடித்தது
மின்னல் வானில் வெடித்தது

சீறிக் காற்று எழுந்தது
சேர்ந்து மழையும் பொழிந்தது
பாரிய மரமும் வீழ்ந்தது
பாய்ந்து வெள்ளம் வடிந்தது

ஆறாய் நீரும் பாய்ந்தது
அருவியாய் பரந்தது
சேறாய் வயலும் நிறைந்தது
செந்நெல் பூத்துச் சிரித்தது

செடிகள் நன்கு தளைத்தன
வளமும் வாழ்வும் செழித்தன
இருண்ட வாழ்வும் அகன்றது
எல்லோர் மனமும் தழ்ந்தது

ஆக்கம்:அன்ரனி றோலன்ற்
கலை (2014)

## பட்டமளித்தவள்!

என் வயிறு நிரம்புவதற்கு
உன் வயிற்றை
ஒட்ட வைத்தாய் அம்மா.
என் வாழ்க்கை

கறுத்து விடக் கூடா தென்று
உன் தேகம் கறுக்க
ஓயாது உழைத்தாய்.

முழு நிலவாய் பிள்ளை நான்
முகம் சிரிக்க வேணு மென்று
சூரியனாய் நீ எரிந்து
வாழ்வு தந்தாய்

சுடும் தரையில் நின்று
சுமை நிதம் சுமந்து
பாலகன் கால்களுக்காய்
பாதணி வாங்கித் தந்தவளே!

காதணி உன் காதுகளில்
இல்லாவிடினும்
கௌரவமாய் எனை
வளர்த் தெடுத்தவளே

பட்டம் நான் பெற்றது
பல்கலைக் கழகத்திலென
பலரும் பேசுகிறார்கள்
எனக்கு மட்டுமே தெரியும்

புல் வெட்டியும்
மண்வெட்டியும்
நீ வாங்கித் தந்த
புத்தகங்களினால் என்று......

ஞா. நிச்மன்
9B

# கைபேசி

என்னோடு எப்போதும் நீ
என்னுல் கலந்து விட்டாய் நீ
நீ இல்லாமல் நான் இல்லை
உன்னை ஓர் நிமிடம் கூட பிரிந்ததில்லை
நீ எப்போதும் என் கைக்குள்
என் அருகினில் என் மார்பினில்
என் தலையனை அருகில்
என் மனம் பரிதவிக்கும்
உன்னைக் காண வில்லைஎன்றால்
உன் சினுங்கலுக்காக காத்திருப்பேன்
எப்போதும் ..........
சிணுங்கிஅழைத்தால் தொட்டுத்தழுவுவேன்
இன்றும் அப்படித்தான்
தொட்டுத் தழுவினேன்
உன் சிணுங்கலின் போது
சாலை வழி பயணத்தின் போது
எதிர்பாராத விபத்து.....
உன்னை விட்டுப் பிரிந்தேன்
கணநேரத்தில் .............
உன் மூலம் அறிவர்
என் உறவும் நட்பும் .........
நான் இறந்த செய்தியை ...........

ம.மதுசன்

தரம் 8A

# தொடர்மொழிக்கு ஒருமொழி

1. அநாதை : தாய் தந்தையரை இழந்தோர்.
2. அந்தப்புரம் : அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்கு அமைந்த தனியிடம்.
3. அலி : ஆணும் பெண்ணுமற்ற தன்மை.
4. அல்லங்காடி : மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை
5. ஆச்சிரமம் : தபோதனர் வசிக்கும் இடம்
6. ஆத்திகன் : கடவுள் இருக்கிறார் என்று நம்புபவன்
7. எய்ப்பில் வைப்பு : பிற்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
8. ஏகபோகம் : தனக்கே உரிமையாக முழுப்பொருளையும் அனுபவித்தல்
9. ஐம்புலன் : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
10. ஐம்பூதம் : நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பொருள்
11. ஒப்புரவு : உலக நடையறிந்து ஒழுகுதல்
12. கப்பம் : பகை அரசருக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள்
13. சிறுபட்டி : கட்டுக்கடங்காத இளைஞன்
14. சிலேடை : இருபொருள் அமையத் தொடுப்பது
15. சுரங்கம் : நிழத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசியவழி
16. சுயம்பு : ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது
17. சுயசரிதை : ஒருவர் தாமே தம்மைப்பற்றி எழுதும் வரலாறு
18. தீர்க்கதரிசி : எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்
19. வாதி : வழக்கைத் தாக்கல் செய்பவன்
20. பிரதிவாதி : வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்

ஆக்கம் : இ.அரிதரன்

தரம் : 9B

## மரபுத்தொடர்

1. அடி பற்றிய மரபுத்தொடர்

1.1 அடியொற்றுதல் - பின்பற்றுதல்

1.2 அடி நகர்த்துதல் - இடம் பெயர்தல்

1.3 அடி பணிதல் - கீழ்ப்படிதல்

1.4 அடிப்படை - மூலாதாரம்

1.5 அடி விளக்குதல் - தன்மரபைப் புகழ் பெறச் செய்தல்

1.6 அடியிடுதல் - ஆரம்பித்தல்

2. கண் பற்றிய மரபுத்தொடர்

2.1 கண் திறத்தல் - அறிவு உண்டாதல்

2.2 கண் வளர்தல் - நித்திரை செய்தல்

2.3 கண்ணெறிதல் - கடைக்கண்ணாற் பார்த்தல்

2.4 கண் கலத்தல் - ஒருவரையொருவர் விரும்புதல்

2.5 கண் மூடுதல் - இறத்தல்

3. கழுத்து பற்றிய மரபுத்தொடர்

3.1 கழுத்துக் கொடுத்தல் - பிறர் துன்பத்தில் உதவுதல்

3.2 கழுத்தறுத்தல் - நம்பிக்கை துரோகம் செய்தல்

3.3 கழுத்தைக் கட்டுதல் - விடாது நெருக்குதல்

4. காது பற்றிய மரபுத்தொடர்

4.1 காது கொடுத்தல் - அவதானித்தல்

4.2 காது குத்துதல் - ஏமாற்றுதல்

4.3 காதிலோதுதல் - கோள் சொல்லுதல்

4.4 காதை கடித்தல் - இரகசியம் கூறல்

5. கால் பற்றிய மரபுத்தொடர்

5.1 கால் பின்னுதல் - தடைப்படல்

5.2 காலாறுதல் - ஓய்ந்திருத்தல்

5.3 கால் பிடித்தல் - காலைப் பற்றி கெஞ்சுதல்

5.4 காலை சுற்றுதல் - பற்றி தொடர்தல், தொடர்ந்து பற்றுதல்

6. கை பற்றிய மரபுத்தொடர்

6.1 கை கழுவுதல் - முற்றாய் விலக்கல்

6.2 கை கூடல் - அநுகூலமாதல்

6.3 கையிடல் - ஆரம்பித்தல்

6.4 கை தளர்தல் - வறுமையுறல்

6.5 கை கொடுத்தல் - உதவி செய்தல்

6.6 கை மிகுதல் - அளவு கடத்தல்

7. தலை பற்றிய மரபுத்தொடர்

7.1 தலை காட்டுதல் - வெளிவருதல்

7.2 தலைக் கொழுப்பு– தான் என்ற அகந்தை

7.3 தலைப்பாரம் - தான் என்ற அகந்தை

7.4 தலை வீக்கம் - தான் என்ற அகந்தை

7.5 தலைக்கனம் - தான் என்ற அகந்தை

7.6 தலை கீழாய் நடத்தல் - முறை தவறி நடத்தல்

7.7 தலை கீழாய் நிற்றல் - பிடிவாதம் கௌ்ளல்

7.8 தலைப் படுதல் - மேற்கொள்ளுதல்

7.9 தலை மறைதல் - ஒளிந்திருத்தல்

8 நா பற்றிய மரபுத்தொடர்

8.1 நாக்கு வளைத்தல் - பழித்தல்

8.2 நாக்கு அடைத்தல் - பேசமுடியாதிருத்தல்

8.3 நாக்கு நீளுதல் - அடக்கமின்றி பேசுதல்

8.4 நாக்கு விழுதல் - பேசநாவெழாமற் போதல்

8.5 நாக்கு தவறுதல் - பொய் சொல்லுதல்

8.6 நாக்கு புரளுதல் - பொய் சொல்லுதல்

8.7 நாக்குத் தப்பல் - பொய் சொல்லுதல்

9. தோள் பற்றிய மரபுத்தொடர்

9.1 தோள் கொடுத்தல் - துணை செய்தல்

9.2 தோள் மாற்றுதல் - பிறர் சுமையை தான் சுமத்தல்

10. பல் பற்றிய மரபுத்தொடர்

10.1 பல்லிளித்தல் - ஏளனம் செய்தல், பல்லை காட்டி கெஞ்சுதல்

10.2 பல்லை கடித்தல் - துன்பத்தை சகித்து கொள்ளுதல்

10.3 பல்லை பிடுங்குதல் - சக்தியை அடக்குதல்

11. முகம் பற்றி மரபுத்தொடர்

11.1 முகத்திலடித்தல் - நேரே நிந்தித்தல்

11.2 முகந்தருதல் - அன்பு காட்டல்

11.3 முகங் கொடுத்தல் - எதிர் கொள்ளுதல

11.4 முகம் முறித்தல் - மனம் நோகல்

11.5 முகம் பார்த்தல் - இரக்கம் காட்டுதல்

12. வாய் பற்றிய மரபுத்தொடர்

12.1 வாய் விடுதல் - வெளிப்படையாகக் கேட்டல்

12.2 வாய் புலம்பல் - பிதற்றுதல்

12.3 வாய் திறத்தல் - பேசத்தொடங்குதல்

12.4 வாயில் மண் போடுதல் - கேடு விளைவித்தல்

ஆக்கம் : மா.றதீஸ்

தரம் : 11B

## பொது அறிவு

1 ஒட்சிசனைக் கண்டு பிடித்தவர் யார்?

யோசப் பிரிஸ்லி

2 காசநோய்க்கு உகந்த பால் எது?

கழுதைப்பால்

3 இரத்தச் சுற்றோட்டம் பற்றி விளக்கியவர் யார்?

வில்லியம் ஹாவே

4 உலகக் குழந்தைகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

நவம்பர் 14

5 உலகில் வேகமாக வளரும் மலை எது?

நங்க பர்வதம்

6 பிரிட்டனின் மிகப் பெரிய கலை விருது எது?

டர்னர் பரிசு

7 மண்டையோட்டில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?

22

8 ஹன்சன்ஸ் என அழைக்கப்படும் நோய் எது?

தொழு நோய்

9 விண்வெளிக்கு மனிதனை அனுப்பிய 3 வது நாடு எது?

சீனா

10 ஏழு குன்றுகள் இருக்கும் நகரம் எது?

உரோம்

11 நேல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

மகா இலுப்பள்ளம்

12 உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?

சகாராப் பாலைவனம்

13. நான்கு கால்களை உடைய பறவை எது?

கட்ஜின் பறவை

14.. பன்னிரண்டு வயதில் பாக்கு நீரிணையை கடந்த சிறுமி யார்?

நுபாலி நியேட்

15. நீர் அருந்தினால் இறந்துவிடும் விலங்கு எது?

கோலாக் கரடி

16. பித்தப்பை அற்ற விலங்கு எது?

ஏலி

17. கறையான் அரிக்காத மரம் எது?

தேக்கு

18. பிலியன் நாட்டின் தீவுகள் எத்தனை?

ஏழாயிரம்

19. இங்கிலாந்தை நீண்ட காலம் ஆண்டவர் யார்?

விக்டோரியா ராணி (63 ஆண்டுகள்)

20. இலங்கையின் முதலாவது செய்தித்தாள் எது?

கொழும்பு ஜேனல்

21. முதன் முதலாக இலங்கையில் தோன்றிய அரசியல் கட்சி எது?

சமசமாஜக்கட்சி

22. பாக்கு நீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் யார்?

நவரத்தினசாமி

டெல்சன் - தரம் 8A
ய.ஜென்சன் -தரம் - 9A
சரண்ராஜ் - தரம் 9B

## சிரிப்பிலே சிந்திக்க

1 கண்பார்த்து சிரிப்பவன் - காரியவாதி

2 காணாமல் சிரிப்பவன் - கஞ்சன்

3 கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்

4 கோபதிதில் சிரிப்பவன் - சிறியன்

5 மோகத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்

6 தெரியும் என்று சிரிப்பவன் - பசப்பாளன்

7 தெரியாது என்று சிரிப்பவன் - நடிகன்

8 இடம் பார்த்து சிரிப்பவன் - சந்தர்ப்பவாதி

9 ஓயாமல் சிரிப்பவன் - வஞ்சகன்

10 மகிமையில் சிரிப்பவன் - மன்னன்

12 துன்பத்தில் சிரிப்பவன் - மனிதன்

13 செயல் கொண்டு சிரிப்பவன் - ஆண்டி

14 நீரோடு சிரிப்பவன் - அறிஞன்

15 இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன்

ப.பயஸ்

தரம் - 11B

## விடுகதைகள்

1 பச்சைச் செடியிலே தயிர் சாதம் அது என்ன?

மல்லிகைப்பூ

2 பிறப்பும் இறப்பும் ஒரே மாதத்தில் வருவது அது என்ன?

நிலா

3 பிடி இல்லாத குடையை தொட முடியவில்லை அது என்ன?

வானம்

4 மண்கூடையில் போட்டால் மகிழ்ந்து சிரிப்பான் அது என்ன?

தேங்காய்

5 மேகத்தின் பிள்ளை தாகத்தின் நண்பன் அது என்ன?

மழை

6 கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது அது என்ன?

நெருப்பு

க. அருட்சன்

தரம் - 9B

"படிப்பதில் ஈடுபாடு கொள்ளாத அரசனாக இருப்பதை விட நிறைய புத்தகங்களுடன் ஏழையாக இருப்பதையே விரும்புவேன்"

மெக்காலே.

"அறிவே ஒருவனின் உண்மையான பலம்"

பிரான்ஸிஸ் பேகன்

# வடமொழியும் தமிழும்

| வடமொழி | தமிழ் |
|---|---|
| அகங்காரம் | செருக்கு |
| அந்தரங்கம் | மறைவு |
| அர்த்தம் | பொருள் |
| அர்ப்பணம் | படையல் |
| அவஸ்தை | தொல்லை |
| அற்புதம் | புதுமை |
| அலட்சியம் | புறக்கணிப்பு |
| அனுமதி | இசைவு |
| அக்கிரமம் | முறைகேடு |
| அசூயை | பொறாமை |
| அதிருப்தி | மனக்குறை |
| அபிப்பிராயம் | கருத்து |
| அயோக்கியன் | நேர்மையற்றவன் |
| அபூர்வம் | புதுமை |
| அபகரி | கைப்பற்று |
| அநேகம் | பல |
| அத்தியாவசியம் | இன்றியமையாதது |
| அநாவசியம் | வேண்டாதது |
| அதிபர் | தலைவர் |

லெ.விதுசன்
தரம் 11

# மரபுப் பெயர்கள்

## இளமைப்பெயர்கள்

கீரி - பிள்ளை
தவளை - குஞ்சு
நெல் - நாற்று
பனை - வடலி
சிங்கம் - குருளை
யானை - கன்று
பூனை - குட்டி
குரங்கு - குட்டி
குதிரை - குட்டி
அணில் - குஞ்சு

## தொனிப் பெயர்கள்

கரடி - கத்தும்
ஆந்தை - அலறும்
மயில் - அகவும்
வண்டு - இரையும்
குதிரை - கனைக்கும்
பசு - கதறும்
யானை - பிளிறும்
நரி - ஊளையிடும்
பன்றி - உறுமும்
நாய் - குரைக்கும்

## கூட்டப்பெயர்கள்

ஆனை - பந்தி
ஆ - நிரை
ஆடு - மந்தை
காலாள் - படை
திறப்பு - கோவை
புல் - கற்றை
பல் - வரிசை
தென்னை - தோப்பு
பூ - கொத்து

## பிற மரபுப் பெயர்கள்

யானை மலம் - இலத்தி
மாட்டு மலம்-சாணம்
பறவை மலம் - எச்சம்
கழுதை மலம் - விட்டை
ஆட்டு மலம் - பிழுக்கை
வைக்கோல் கூட்டம் - போர்
புகையிலைக்கூட்டம் - பாடம்
வண்டி செலுத்துவோன் - சாரதி
கப்பல் செலுத்துவோன் - மாலுமி

சி.மேவின்யூட்
தரம் 11

## மொழிவளம்

| வழுநிலை | வழாநிலை |
|---|---|
| அப்ப | அப்போது |
| அண்டு | அன்று |
| அறுணாக் கொடி | அரைஞாண்கொடி |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை |
| ஆம்பளை | ஆண்பிள்ளை |
| இளனி | இளநீர் |
| ஈக்கில் | ஈரக்கு |
| எண்ணை | எண்ணெய் |
| ஒட்டறை | ஒட்டடை |
| ஒண்டு | ஒன்று |
| ஒத்தணம் | ஒற்றடம் |
| கட்டிடம் | கட்டடம் |
| கக்கட்டி | கட்கட்டி |
| கம்பிளி | கம்பளி |
| நாகரீகம் | நாகரிகம் |
| நோம்பு | நோன்பு |
| பயத்தங்காய் | பயற்றங்காய் |

அ.அனோஜ்சாந்த்
தரம் 11

## நூல்களும் - ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| இராமாயணம் (மூலம்) | - | வான்மீகி |
| இராமாயணம் (தமிழ்) | - | கம்பர் |
| பெரிய புராணம் | - | சேக்கிழார் |
| மகாபாரதம் (மூலம்) | - | வியாசர் |
| மகாபாரதம் (தமிழ்) | – | வில்லிபுத்தூரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| தேம்பாவணி | - | வீரமா முனிவர் |
| மகாவம்சம் | - | மகாநாமர் |
| பாஞ்சாலி சபதம் | - | சுப்பிரமணிய பாரதியார் |
| காஞ்சிபுராணம் | - | சிவஞான முனிவர் |
| நற்சிந்தனை | – | யோகர் சுவாமிகள் |
| நன்னூல் | - | பவணந்தி முனிவர் |
| வெற்றிவேற்கை | – | அதிவீரமாபாண்டியர் |
| நல்வழி, ஆத்திசூடி | – | ஔவையார் |
| மனோன்மணியம் | | சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | - | இரவீந்திரநாத்தாகூர் |
| மணிமேகலை | – | சீத்தலைச்சாத்தனார் |
| தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| சூளாமணி | – | தோலாமொழித்தேவர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| போரும் சமாதானமும் | - | லியோ ரோல்ஸ் றோய் |
| இலியட், ஒடிசி | – | ஹோமர் |
| நளவெண்பா | - | புகழேந்திப்புலவர் |
| நள்ளிரவுச்சுதந்திரம் | - | லாரி காலின்ஸ், டொமினிக், லேப்பியர் |
| அர்த்தசாஸ்த்திரம் | - | கௌடில்யர் |
| ஆசியஜோதி | - | கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை |
| சத்திய சோதனை | – | மகாத்மாகாந்தி |
| குடியாட்சி | – | பிளேற்றோ |
| ஒரு உலகம் | - | வேனட்ஸ் வில்கி |
| மூலதனம் | - | கார்ள்மாக்ஸ் |

சகுந்தலை வெண்பா – க.நடேசபிள்ளை

இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார்

கீதகோவிந்தம் - ஜெயதேவர்

யோ.வினுசியா

12 கலை (2014)

## இந்து நாகரிகத்தில் இசைக்கலையின் முக்கியத்துவம்

திருக்கோயில் வளர்த்த நுண்கலைகளில் மிகவும் உன்னத கலையாக போற்றப்படுவது இசைக்கலையாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் தனித்துவமானதாக கொள்ளப்படும் இவ் இசைக்கலை மனிதனின் மனத்தை இயைவுபடுத்தும் சாதனமான அமைந்துள்ளது. இசை செவிக்கு இன்பம் தருவதோடு மட்டும் நின்றுவிடாது, ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்ப பேற்றை தரவல்ல ஓர் கலையாகும். மனிதனுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் இவ் இசைக்கலையானது, இறைவனையும் சாந்தப்படுத்தும் ஓர் ஊக்கியாகவும் இருந்துள்ளது என்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் சான்றாகின்றன. அந்தவகையில் இறைவனே இசைவடிவினன் என்பது இந்துமத நம்பிக்கையாக காணப்படுகின்றது.

இசைக்கலை பற்றி வேதங்களில் ஒன்றான சாமவேதம் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளது. இவ் வேதம் வித்திட்ட இசையே பிற்காலத்தில் ஆலயங்களை மையமாக கொண்டு இசை வளர்வதற்கு ஏதுவாக அமைந்தது. இதே போன்று புராண இதிகாசங்களும் இசைக்கலையை பல்வேறு இசைக் கருவிகளோடு தொடர்புபடுத்தியுள்ளது. அந்தவகையில் சிவனுக்கு உடுக்கையும் நாரதாருக்கு தம்புராவையும் சரஸ்வதிக்கு வீணையையும் கண்ணனுக்கு புல்லாங்குழல், சங்கு போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளமை இறைவன் இசையில் கொண்டுள்ள மகத்துவத்தை அறியக் கூடியதாக உள்ளது. இதைவிட இராமாயணத்தில் வரும் இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன் என்பதை பத்துத் தலைகளில் ஒன்றினை வெட்டி நரம்புகளின் துணையுடன் இசைமீட்டி சிவனிடம் வரம் பெற்றதாக சான்றுகள் காணப்படுகின்றன.

தென்னிந்திய வரலாற்றுக் காலங்களில் சங்க காலத்தில் மக்களது வாழ்க்கையுடன் இசையானது இரண்டறக் கலந்து காணப்பட்டது. இசைபற்றி சங்க நூல்களான பரிபாடல், சிறுபானாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பெரும்பானாற்றுப்படை போன்ற இலக்கியங்களில் எடுத்துக் கூறுவதுடன், குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தல்பண், பாலைப்பண் என்ற அடிப்படையில் மக்கள் தத்தம் நிலங்களில் சங்கீத மரபைக் கொண்டிருந்தனர். சங்க காலத்தில் பண்களை பாடியவர்கள் பாணர் எனப்பட்டனர். யாழே இசைக் கருவிகளில் சிறப்பானதாக இக்காலத்தில் காணப்பட்டது பெருநாரை, பெருங்குருகு, தாளசமுத்திரம் போன்ற இசைநூல்கள் இருந்தமை பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

இதேபோன்று சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும், காரைக்காலம்மையார் முதல் ஆழ்வார் மூவர் பாடல்களிலும் இசையின் சிறப்பினை அறியலாம். சிலப்பதிகாரத்தில் தமிழரின் சங்கீதம் செந்நெறிச் சங்கீதமாக உணர்ந்ததை அறியக் கூடியதாக உள்ளது. 'யாழும் குழலும் சீரும் மிடரும் தாழ்குரல் தண்ணுமை ஆடலோடு' என்பது இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்.

பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசையை, ஆலயங்களை மையமாகக் கொண்டே வளர்த்தனர். 'ஏழிசையாய் இசைப்பயனாய்' எனச் சுந்தரரும் 'ஓசை ஒலி எலாம் ஆனாய்' என அப்பரும் 'பண்ணும் பதமேழும்' என சம்மந்தரும் 'பண் சுமந்த பாடல் பரிசு' என மாணிக்கவாசகரும் இசையினை போற்றிப் பாடியுள்ளனர். ஆழ்வார்களின் பாடல்களில் 'அறுகால் வலி வண்டுகளா யிரநாமஞ்' என ஆயிரம் நாமங்களையும் பண் இசைத்து பாடியமையும் இசைக்கலை பல்லவர் காலத்தில் பெற்ற முக்கியத்துவத்தை அறியக்கூடியதாக உள்ளது.

மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக்கோயிலின் கல்வெட்டில் தன்னை 'சங்கீரணசாதி' என குறிப்பிட்டுள்ளான். மேலும் 'பரிராதினி' என்னும் பெயர் கொண்ட வீணையில் மன்னன் வல்லவனாக இருந்தமையும், இசைக்கலை மன்னர்களின் ஆதரவைப் பெற்று வளர்ந்த கலையாக அமைந்துள்ளது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இதேபோன்று இராசசிம்மன் 'வாத்ய வித்யாதரன்''வீணாதரன்' எனச் சிறப்பு பெயர்களை கொண்டிருந்தமையும் மன்னர்கள் இசையில் காட்டிய ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது.

பல்லவ மன்னர்களைத் தொடர்ந்து, சோழ மன்னர்கள் இசைக்கலையை வளர்க்க அரும்பாடு பட்டவர்களாக குறிப்பிடப்படுகின்றனர். அந்த வகையில் ஆலயங்களில் பல்வகை இசைக்கருவிகள் ஆராதனைகளில் வாசிக்கப்பட்டன. துக்கை, தண்ணுமை போன்ற இசைக்கருவிகள் மன்னனாலும் மக்களாலும் ஆலயங்களில் வாசிக்கப்பட்டதையும் அறியக் கூடியதாகவுள்ளது. மேலும் முதலாம் இராஜராஜன் கோயில்களில் தேவாரங்களை ஓதும் வழக்கத்தை நடைமுறைப்படுத்தினான். சோழர் காலத்தில் 'வாச்சிய மாராயன்' பட்டம் இசைக்கலைஞர்களுக்கு வழங்கப்பட்டமை இசைக்கு மன்னர்களின் பங்களிப்பை அறியக் கூடியதாக உள்ளது. தேவாரம் ஓதுபவர்களை மேற்பார்வை செய்ய 'தேவாரநாயகம்' என்னும் அலுவலரை நியமித்தமையும் சோழர் காலத்தில் மன்னர்களின் ஆதரவுடன் இசைக்கலை வளர்ச்சியடைந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு தென்னிந்தியாவில் வளர்க்கப்பட்ட இசைக் கலையானது நாயக்கர் காலத்திலும் கீர்த்தனை வடிவத்தில் வளர்ச்சியடைந்தது. நந்தனார் கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை என்பன இக்காலத்தில் முக்கியம் பெற் இசையோடு தொடர்புபட்ட வளர்ச்சிப் படிநிலைகளாகும்.

நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்களில் மதுரை அழகர் ஆலயத்தில் இசையை மெருகூட்டும் இசைத்தூண்கள் ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளமை, அருணகிரிநாதர் சிறந்த சந்த லயம் உடைய நூலாக திருப்புகழை இக்காலத்தில் பாடியமையும் இசையின் பேறேயெனலாம்.இவ்வாறு இசைக்கலையானது தென்னிந்திய வரலாற்றுக் காலங்களில் பெருவளர்ச்சிடைந்ததைப் போன்று தற்காலத்திலும் மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர் தியாகராஜ பாகவதர் போன்றோரின் பங்களிப்புடன் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

இவற்றை விட இலங்கையிலும் இந்தியாவிலும் ஆலயங்களில் பஜனை, பிரார்த்தனை, நாமகீர்த்தனை, கதாகலாட்சேயம் என்பன இசை வளர்ச்சியை பிரதிபலிக்கும் சான்றுகளாக இன்றும் அமைந்துள்ளன. பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இவை ஒரு பாடமாக கற்பிக்கப்டுகின்றது. இதற்கு சான்றாக விபுலானந்தர் இசைக்நடனக் கல்லூரி, இராமநாதன் இசை நடனக் கல்லூரி போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே ஆரம்ப காலம் முதல் இன்றுவரை பேணப்பட்டு வரும் இவ் இசைக்கலையை பேணி மானிடத்தின் மகத்துவத்தை போற்றுவோம்.

தொகுப்பு:- செல்வி. கந்தலீலா நடராஜா,ஆசிரியர்

ST ANTONYS
KAYTS
COLLEGE